# அழகப்பா அரசு கலைக் கல்லூரி

(முதல் நிலைக் கல்லூரி)

தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் "B", NIRF-2024 இல் 76 ஆவது தகுதி பெற்றது

அழகப்பா பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது

**காரைக்குடி - 3**



## ஆண்டு மலர்

## 2025 - 2026



# அழகப்பா அரசு கலைக் கல்லூரி




முனைவர் **ப. வசந்தி** M.Sc., M.Phil., Ph.D.,

முதல்வர்

# அழகப்பா அரசு கலைக் கல்லூரி

(முதல் நிலைக் கல்லூரி)
தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் "B", NIRF-2024 இல் 76 ஆவது தகுதி பெற்றது
அழகப்பா பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது
**காரைக்குடி - 3**



# ஆண்டு மலர்

# 2025 - 2026

# ஆண்டு மலருக்குள் அடியெடுத்து வைக்கும் முன்

அன்புடையீர்,

வணக்கம், பத்மபூஷண் டாக்டர் **RM. அழகப்பச் செட்டியார்** அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மனிதநேய மாமனிதர். தனது கல்விக் கொடையால் கோடான கோடி இதயங்களில் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் விழுத் தெய்வம். தம் கல்வி வளாகத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவியரின் மகிழ்ச்சியையே தம் மகிழ்ச்சி எனக் கருதிக் கல்விப் பணியாற்றிய செயல்வீரர். ஏழை எளிய மாணவ, மாணவியர் வாழ்க்கையில் கல்விச் சுடரேற்றி, அவர்களின் குடும்பங்களை ஒளிரச் செய்த ஒளி விளக்கு. தொலை நோக்கும் கனவுகளும் இல்லாமல் எதிர்காலத்தை உருவாக்க முடியாது என்பதில் உறுதியாக இருந்தவர். அவ்வாறு அவர் கண்ட கனவில் உருவாகியது கல்வித் திருக்கோயில் காரைக்குடி, அழகப்பா அரசு கலைக்கல்லூரி ஆகும். இக்கல்லூரி சிவகங்கை மாவட்ட மாணவர்கள் மட்டுமின்றி அருகிலிருக்கும் பல மாவட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்குக் கலங்கரை விளக்கமாய்த் திகழ்கிறது. எண்ணற்ற அறிஞர்களைப் பல்துறை வல்லுநர்களை உருவாக்கி வருகின்றது.

இக்கல்லூரியின் 2025 - 2026 ஆம் கல்வி ஆண்டில் வெளிவரும் ஆண்டு மலர், ஆண்டறிக்கை, துறை சார்ந்த சிறப்புகள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவச் செல்வங்களின் ஆக்கங்கள், கவிதைகள், வரைபடங்கள், சாதனைகள் பலவற்றையும் தாங்கி நிற்கின்றது. இவ்விதழ் கல்லூரியில் கிடைத்த அனுபவங்களின் கருத்துக் கருவூலம், காலப்பெட்டகம், மாணவர்கள் தங்கள் கல்லூரிக் கால மலரும் நினைவுகளைத் திரும்பிப் பார்ப்பதற்குதவும். எதிர்கால ஆவணம், இம்மலர்க் கொத்தை உங்கள் கரங்களில் தவழ விடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

அன்புடன்,

**பதிப்பாசிரியர் மற்றும் மலர்க் குழுவினர்**

பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய சிறப்பு விருந்தினர் அழகப்பா பல்கலைக்கழகத் தேர்வாணையர் முனைவர் எம். ஜோதிபாசு அவர்களே! கல்லூரியின் துறைத்தலைவர்களே! பேராசிரியர்களே! ஆசிரியர்களே! ஆசிரியரல்லாப் பணியாளர்களே! இனிய மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாரம்பரியமிக்க இக்கல்லூரியின் ஆண்டு விழா நடைபெறுகின்ற இன்று (28.03.2026) 2025 – 2026 ஆம் கல்வி ஆண்டிற்கான கல்லூரியின் ஆண்டறிக்கையைத் தங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

## 1. முதல்வர்

அரவக்குறிச்சி அரசு கலைக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய முனைவர் **ப. வசந்தியாகிய** நான் அக்கல்லூரியில் இருந்து பதவி உயர்வு பெற்று **24.07.2025** முதல் அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி வருகிறேன்.

## 2. தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பு

தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பு **NIRF 2024**இல் இந்திய கல்லூரிகளுக்கிடையில் தரவரிசைப்பட்டியலில் இக்கல்லூரிக்கு **76**ஆவது இடம் கிடைத்துள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள்

அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் **58** ஆசிரியர்களும், **11** அண்ணாமலைப் பல்கலைக்கழக மிகை ஆசிரியர்களும், **47** முதல் சுழற்சி கௌரவ விரிவுரையாளர்களும், **39** இரண்டாம் சுழற்சி கௌரவ விரிவுரையாளர்களும், **20** பெற்றோர் ஆசிரியர் கழக ஆசிரியர்களும் பணியாற்றி வருகின்றனர். இக்கல்லூரியில் **10** ஆசிரியரல்லாப் பணியாளர்களும், வெளிமுகமை மூலம் **12** பேரும் ஆக மொத்தம் **197** பேர் பணியாற்றி வருகின்றனர்.

## 4. மாணவ, மாணவியர்

அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் **3393** இளநிலை மாணவ மாணவிகளும், **439** முதுநிலை மாணவ மாணவிகளும் மற்றும் **40** ஆராய்ச்சி மாணவர்களும் ஆகமொத்தம் **3872** மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

## 5. கல்லூரி அறக்கட்டளை

அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் திரு. வயி.அ. அண்ணாமலைச் செட்டியார் மற்றும் திருமதி அ. அன்னபூரணி ஆச்சி நினைவு அறக்கட்டளையானது உயர்கல்வித்துறை அனுமதியுடன் **23.08.2022** அன்று நிறுவப்பட்டது. ரூபாய் இரண்டரை லட்சம் முதலீட்டில் கிடைக்கும் வட்டி தொகையிலிருந்து இளநிலை மற்றும் முதுநிலை பயிலும் இயற்பியல் மற்றும் கணினி அறிவியல் துறைகளில் முதல் தரம் பெறும் மாணவர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கப்படுகிறது.

இக்கல்லூரியில் பேராசிரியர் AL. மெய்யப்பன் மற்றும் திருமதி மெ. சரோஜா நினைவு அறக்கட்டளையானது உயர்கல்வித்துறை அனுமதியுடன் **13.12.2023** அன்று நிறுவப்பட்டது. ரூ. **5,75,000/-** முதலீட்டில் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து இளநிலை மற்றும் முதுநிலை பயிலும் வேதியியல் துறையில் முதல் தரம் பெறும் மாணவர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கப்படுகிறது. இக்கல்லூரியில் திருமதி மீனாட்சி பஞ்சநதம் நினைவு அறக்கட்டளையானது உயர்கல்வித்துறை அனுமதியின் பேரில் 10.05.2024 அன்று நிறுவப்பட்டது. ரூபாய் 5,00,000/- முதலீட்டில் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து இளநிலை மற்றும் முதுநிலை பயிலும் புவியமைப்பியல் துறையில் முதல்தரம் பெறும் மாணவர்களுக்குச் சிறப்பு பரிசு வழங்கப்படுகிறது.

## 6. முன்னாள் மாணவர்கள் சங்கம்

அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் 1981 – 1984 இல் பயின்ற இளநிலை இயற்பியல் முன்னாள் மாணவர்கள் சார்பாக ரூ. 2 லட்சம் மதிப்பில் குடிநீர் சுத்திகரிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இயற்பியல் துறை

மூலமாக ரூ. 1.5 லட்சம் மதிப்பில் சிமெண்ட் கல் பதித்து, தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. ரூ. 1.5 லட்சம் மதிப்பில் முதுநிலை இயற்பியல் ஆய்வக உபகரணங்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதே இயற்பியல் துறையில் 1982-1985இல் பயின்ற இளநிலை இயற்பியல் முன்னாள் மாணவர்கள் சார்பாக ரூ.1,30,000/- மதிப்பில் டிஜிட்டல் ஸ்மார்ட் போர்டு நிறுவப்பட்டுள்ளது.

### 7. இடப்பெயர்வு மற்றும் பணி நியமனம்

அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் பணியாற்றிய ஆசிரியர்கள் **முனைவர் ஆர். நடராஜன்,** இணைப் பேராசிரியர், வேதியியல் துறைத் தலைவர், **முனைவர் க. சோமசுந்தரம்,** இணைப்பேராசிரியர், ஆங்கிலத் துறை, **முனைவர் ஆர். ராஜன் கணபதி,** இணைப்பேராசிரியர், ஆங்கிலத்துறை, **முனைவர் ஏ. ரமேஷ்,** இணைப் பேராசிரியர், வணிகவியல் துறை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழக மிகை ஆசிரியர்கள் முனைவர் **எஸ். திருமாறன்,** இணைப்பேராசிரியர், வணிகவியல் துறை, முனைவர் **எஸ். ராஜ்மோகன்,** உதவிப் பேராசிரியர், புவியமைப்பியல் துறை ஆகியோர் இடப்பெயர்வு பெற்று சென்றுள்ளார்கள்.

இக்கல்லூரியில் முனைவர் **எம். லட்சுமி,** இணைப் பேராசிரியர், வேதியியல் துறைத் தலைவர் மற்றும் **முனைவர் எஸ். பாஸ்கர சிரஞ்சீவி,** இணைப்பேராசிரியர், விலங்கியல் துறை ஆகியோர் நமது கல்லூரியில் பணியில் சேர்ந்துள்ளனர்.

### 8. கல்வி உதவித்தொகை

அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் பயிலும் **2803 BC / MBC / DNC** மாணவ மாணவியர்களுக்குப் புதுப்பிக்கப்பட்ட கல்வி உதவித்தொகை **ரூ.57,91,705/-** பெற்று வழங்கப்பட்டுள்ளது. புதிதாக கல்வி உதவித்தொகைப் பெறுவதற்கு இணையவழிப் பதிவு நடைபெற்று வருகிறது. தமிழ்வழியில் பயிலும் **160** மாணவ, மாணவியர்களுக்கு **ரூ.1,44,000/-** கல்வி உதவித்தொகை இக்கல்வி ஆண்டில் பெற்று வழங்கப்பட்டுள்ளது. **906 SC/ST** மாணவ, மாணவியர்களுக்கு புதுப்பிக்கப்பட்ட கல்வி உதவித்தொகை **ரூ.50,37,385/-** பெற்று வழங்கப்பட்டுள்ளது. **SC/ST** மாணவ, மாணவியர்களுக்கு புதிதாக கல்வி உதவித்தொகைப் பெறுவதற்கு இணையவழிப் பதிவு நடைபெற்று வருகிறது. மேலும் சிறுபான்மையினர் கல்வி உதவித்தொகைப் பெறுவதற்கு இணையவழிப் பதிவு நடைபெற்றுள்ளது.

### 9. நான் முதல்வன் திட்டம்

நான் முதல்வன் திட்டம் **2025-2026** ஆம் கல்வியாண்டிலும் நமது கல்லூரியில் முதல்வர், துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்களின் ஒத்துழைப்போடு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

நான் முதல்வன் திட்ட ஒருங்கிணைப்பாளராக வணிகவியல் துறை இணைப்பேராசிரியர் **முனைவர் நா. பாரதி** அவர்கள் செயல்பட்டு வருகின்றார். **2025-2026** ஆம் கல்வியாண்டில் மாணவர்களுக்கு நேரடியாகவும், ஆன்லைன் மூலமாகவும் வகுப்புகள் நடைபெற்றன. இத்திட்டத்தின் மூலம் **3328** மாணவர்கள் பயனடைந்தனர்.

நான் முதல்வன் திட்ட பாடப் பொறுப்பாளர்களுக்கு ஆசிரியர் மேம்பாட்டு திட்ட வகுப்பு (Faculty Development Program) அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது. இதில் மூன்றாம் பருவம் மற்றும் ஐந்தாம் பருவத்தில் **24** பேராசிரியர்களும், இரண்டாம், நான்காம் மற்றும் ஆறாம் பருவத்தில் **26** பேராசிரியர்களும் கலந்து கொண்டனர். 22.02.2025 அன்று நான் முதல்வன் திட்டத்தின் சார்பாக இறுதி ஆண்டு பயிலும் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்றது. இதில் எங்கள் கல்லூரியைச் சேர்ந்த 420க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர். கல்லூரி வேலைவாய்ப்பு முகமையைச் சார்ந்த முனைவர் செ.சு.நா. சோமசுந்தரம், முனைவர் ந. கவிதா மற்றும் முனைவர் மு. தியாகராஜன் ஆகியோர் வேலைவாய்ப்பு முகாமிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

மாணவர்கள் அதிக அளவில் கலந்து கொள்ள அனைத்து துறைத்தலைவர்களும் முழு ஒத்துழைப்பை வழங்கினர். வேலைவாய்ப்பு முகமை ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் முழு முயற்சி எடுத்தனர். இவ்வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு நிறுவனங்களுக்கு மொத்தம் 318 மாணவ, மாணவிகள் தேர்வு

செய்யப்பட்டுள்ளனர். இதில் சில மாணவர்கள் இரண்டிற்கும் மேற்பட்ட நிறுவனங்களில் தேர்வு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## 10. புதுமைப்பெண் திட்டம் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டம்

அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் தமிழ்நாடு அரசின் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் 1206 மாணவிகளும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் 542 மாணவர்களும் பயன்பெற்றுள்ளனர்.

## 11. நிதி ஒதுக்கீடு

தமிழக அரசின் சிறப்பு திட்டப் பயன்கள் நிதி ஒதுக்கீட்டில் இயந்திரம் மற்றும் சாதனங்கள் பராமரிப்பிற்காக **ரூ.23,800/-** மும், ஆய்வக உபகரணங்களுக்கு **ரூ.29,16,321/-** மும், இயந்திர உபகரணங்களுக்காக **ரூ.6,28,000/-** மும், கூடுதலாக புத்தகங்கள் வாங்குவதற்காக **ரூ.3,90,000/-** மும், நம் கல்லூரிக்குக் கிடைக்கப்பெற்றது. நம் கல்லூரியின் பராமரிப்பு பணிக்காக **ரூ.30,000/-** மும், ஒதுக்கீடு செய்யப்பட்டு பொருளாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

## 12. பிற

தமிழக அரசு நம் கல்லூரிக்கு ஒதுக்கிய **ரூ. 2 லட்சம்** கல்லூரி கலைத் திருவிழாவிற்குப் பெறப்பட்டு மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டது.

## 13. IQAC

நமது கல்லூரி உள்தர மதிப்பீட்டு குழு **(IQAC)** சார்பில் (தேசிய குழந்தைகள் அறிவியல் காங்கிரஸ் **2025 - 26)**, இந்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை மற்றும் அழகப்பா அரசு கலைக் கல்லூரி இணைந்து அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு பணிக்கால பயிற்சி **(In Service Training programme)** கல்லூரி வளாகத்தில் வழங்கப்பட்டது.

## 14. வேலைவாய்ப்பு முகமை

**TNPSC** தேர்வுக்கு நமது கல்லூரி பேராசிரியர்களால் வேலைவாய்ப்பு மையம் மூலம் **03.01.2025** முதல் **01.03.2025** வரை வகுப்புகள் நடத்தப்பட்டன. சிவகங்கையில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் எமது கல்லூரி மாணவர்கள் பங்கேற்று, 101 பேர் வேலைவாய்ப்பு பெற்றனர் என்பதைப் பெருமையோடு பதிவு செய்கிறோம்.

## 15. ஐம்பெரும் விழா

அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் **24.03.2026** அன்று விளையாட்டு விழாவும் **25.03.2026** அன்று கல்லூரிப் பட்டமளிப்பு விழாவும், **26.03.2026** அன்று முத்தமிழ் விழாவும், **27.03.2026** அன்று நுண்கலை மன்ற விழாவும், **28.03.2026** அன்று கல்லூரி ஆண்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றன.

## 19. நன்றியுரை

அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்துவரும் தமிழக அரசுக்கும், பல்கலைக்கழக நிதி நல்கைக்குழுவிற்கும் மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் ஆகியோருக்கும், கல்லூரி உள்கட்டமைப்பு வசதி தொடர்பான பணிகளைச் செய்து வரும் பொதுப்பணித்துறையினருக்கும் நகரின் முக்கிய பிரமுகர்களுக்கும் கல்லூரி நிர்வாகத்தின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இக்கல்லூரியின் பெருமையையும் பாரம்பரியத்தையும் பாதுகாக்கத் தொடர்ந்து பாடுபட்டுவரும் பேராசிரியர்களுக்கும், ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கும் ஆய்வக உதவியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் மாணவ, மாணவியருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி!!!

அழகப்பா அரசு கலைக்கல்லூரித் தமிழ்த் துறையில் இக்கல்வியாண்டில் இரண்டாம் சுழற்சியில் இளங்கலைத் தமிழ்ப் பாடம் தொடங்கப்பட்டது. இதில் 55 மாணவ, மாணவியர் சேர்ந்து பயின்று வருகின்றனர். இரண்டாம் சுழற்சிக்கான கௌரவ விரிவுரையாளர்களாக முனைவர் அ. அருள்சாமி, முனைவர் இரா. கார்த்திகேயன் ஆகியோர் இக்கல்வியாண்டில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். சிவகங்கை மகளிர் கலைக்கல்லூரியில் இருந்து கௌரவ விரிவுரையாளர் முனைவர் வே. சித்ரா பணி மாறுதல் பெற்று அழகப்பா அரசு கலைக்கல்லூரிக்கு இரண்டாம் சுழற்சி விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்துள்ளார்.

அழகப்பா அரசு கலைக்கல்லூரித் தமிழ் உயராய்வு மையத்தின் சார்பாக இளங்கலை, முதுகலை மன்றத் தொடக்க விழா 12.09.2025 (சனிக்கிழமை) அன்று நடைபெற்றது. இதில் தமிழக அரசின் தமிழ்ச்செம்மல் விருதாளரும் பொன்னமராவதி முத்தமிழ்ப் பாசறையின் செயலாளருமாகிய திரு. நெ.இரா. சந்திரன் அவர்கள் கலந்து கொண்டு தமிழின் இனிமை குறித்துச் சிறப்புரை நிகழ்த்தினர். முதுகலை மாணவர்களுக்கான அழகப்பர் ஆய்வு மையத்தின் சார்பாக 30.09.2025 (செவ்வாய்க் கிழமை) அன்று கருத்தரங்கத் தொடக்கவிழா நடைபெற்றது. இதில் அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவரும் கலைப்புல முதன்மையருமான முனைவர் சு. இராசாராம் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கு பெற்று பண்பாட்டு நிலவியல் நோக்கில் சங்க இலக்கியம் என்னும் பொருண்மையில் ஆய்வுரை நிகழ்த்தினார்.

தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்களால் கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டதன் இருபத்தைந்தாம் ஆண்டு வெள்ளிவிழா நிகழ்வினை முன்னிட்டு அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் திருக்குறள் தொடர்பான வினாடி – வினா, பேச்சு, படைப்பாக்கம் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டது. ரூபாய் 31,500/- (ரூபாய் முப்பத்தோராயிரத்து ஐந்நூறு மட்டும்) வங்கி வரைவோலை மூலமாக வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசாக வழங்கப்பட்டது. (அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் திருக்குறள் கருத்தரங்கம் தமிழக அரசால் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியிலிருந்து (ரூபாய் 40000/-) வான்புகழ் வள்ளுவம் என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

மேலும் பன்னாட்டுக் கருத்தரங்கில் வாசித்தளிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் வான்புகழ் வள்ளுவம் என்னும் தலைப்பில் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களின் நிதிப் பங்களிப்பில் 293 பக்கங்கள் கொண்ட நூலாக வடிவமைக்கப்பட்டு அழகப்பா பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் மதிப்புறு கர்னல் பேராசிரியர் க. ரவி அவர்களால் பன்னாட்டுக் கருத்தரங்கில் வெளியிடப்பட்டது. இக்கருத்தரங்கின் முதன்மை ஒருங்கிணைப்பாளராகத் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் முனைவர் மா. சிதம்பரம் அவர்களும் இணை ஒருங்கிணைப்பாளர்களாகத் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர்கள் முனைவர் ப.சு. செல்வமீனா, முனைவர் சி. பரமேஸ்வரி, உதவிப் பேராசிரியர்கள் முனைவர் அ. பாரதிராணி, முனைவர் து. இரவிக்குமார் ஆகியோரும் செயல்பட்டனர்.

தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் து. இரவிக்குமார் அவர்கள் அந்தமான் ஸ்ரீபுரம் தமிழர் சங்கத்தில் நடைபெற்ற செவ்வியல் இலக்கியங்களில் பண்பாட்டுக் கூறுகள் என்னும் தலைப்பிலான பன்னாட்டுக் கருத்தரங்கில் பேராளராகப் பங்கு பெற்று வேய்ந்தோன் தந்த பண்பாட்டுக் கொடை என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வாசித்தளித்தார்.

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மா. சிதம்பரம் அவர்கள் மொரிஷியஸ் திருக்குறள் அமைப்பினால் இலங்கை வவுனியா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட பன்னாட்டுக் கருத்தரங்கில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு ஒளிதொழுது ஏத்தும் உலகு என்னும் பொருண்மையில் சிறப்புரை நிகழ்த்தினார். மேலும் மயிலம் வீரசைவத் திருமடம் இலங்கையில் நடத்திய சிவஞான பாலய சுவாமிகள் நூற்றாண்டு விழாவில் சிறப்பு அழைப்பாளராகப் பங்குபெற்று குவலயம் காக்கும் சிவஞானி என்னும் பொருண்மையில் சிறப்புரை நிகழ்த்தினார்.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பாக இளையோர் பயிற்சிப் பாசறை அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்றது. இதில் கவிஞர் நெல்லை ஜெயந்தா, முனைவர் மகாசுந்தர், முனைவர் கண்ணதாசன், திருமதி கல்பனா தர்மேந்திரா, முனைவர் மா. சிதம்பரம் ஆகியோர் பங்கு பெற்றுப் பல்வேறு பொருண்மைகளில் சிறப்புரை நிகழ்த்தினர்.

தமிழக அரசின் ஆணைக்கிணங்க உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தால் மாநில அளவில் பல்கலைக்கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட தொல்காப்பியச் சுழல் அரங்கில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர்

மா. சிதம்பரம் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகப் பங்குபெற்று பக்தி இலக்கியங்களில் தொல்காப்பிய மரபின் மாட்சியும் நீட்சியும் என்னும் பொருண்மையில் சிறப்புரை நிகழ்த்தினார்.இது தமிழகத்தின் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் நேரலை செய்யப்பட்டது. இச்சொற்பொழிவு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தால் நூலாக வெளியிடப்படுகின்றது.

தமிழ்த்துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் து. இரவிக்குமார் அவர்களால், சிதறல்கள், தெருவில் வந்த தேவதையே என்னும் இரு கவிதை நூல்கள் இக்கல்வியாண்டில் வெளியிடப்பட்டன. காரைக்குடி கலைஞர் தமிழ்ச்சங்கத்தின் சார்பாகத் தமிழ்த்துறைப் பேராசிரியர்களுக்குக் கலைஞர் விருது வழங்கப்பட்டது.

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மா. சிதம்பரம் அவர்களுக்கு, நூற்றாண்டு கண்ட மயிலம் சிவஞானபாலய சுவாமிகள் வீரசைவத் திருமடத்தின் மிக உயரிய விருதான சிவஞானி விருது இக்கல்வியாண்டில் வழங்கப்பபட்டது. தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் து. இரவிக்குமார் அவர்களுக்கு, தியாகதுருகம் கம்பன் கழகத்தின் சார்பாகக் கவிச்செம்மல் விருது வழங்கப்பட்டது.

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மா. சிதம்பரம் அவர்களின் நெறியாளுகையின்கீழ் சங்க அகமாந்தர் கூற்றுகளில் மனநல ஆற்றுவித்தல் என்னும் பொருண்மையில் முனைவர் மு. பிரியங்கா முனைவர் பட்டம் பெற்றார்.

தமிழக அரசால் நடத்தப்பட்ட வள்ளலார் மாநாட்டு நிகழ்வோடு தொடர்புடையதாகக் கல்லூரி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளைத் தமிழ் உயராய்வு மையம் தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறையுடன் சேர்ந்து நடத்தியது.

தமிழ் இளங்கலை, முதுகலை மன்ற நிறைவு விழா 23.03.2026 (திங்கள் கிழமை) அன்று நடைபெற்றது. தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை கல்லூரித் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ச. இளங்கோ அவர்கள் கலந்து கொண்டு மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என்னும் பொருண்மையில் சிறப்புரை நிகழ்த்தினார். 26.03.2026 அன்று முத்தமிழ் விழா நடத்தப்பெற்றது. இதில் மதுரை தன்முனைப்புப் பேச்சாளர் தமிழிசையரசி இந்திரா விஜயலெட்சுமி அவர்கள் பங்கு பெற்றுத் தமிழிசையும் திரையிசையும் என்னும் பொருண்மையில் இசைப்பேருரை நிகழ்த்தினர், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தாரால் மாதவி மாண்பு என்னும் பொருண்மையில் நாடகம் நிகழ்த்தப்பட்டது.

## இளமையின் பொற்காலம்

கல்லூரி வாசல் கடந்த கணமே,
கனவுகள் கையில் மலர்ந்தது,
புதிய உலகம் திறந்தது,
புதிய உறவுகள் நெஞ்சில் நிறைந்தது.

காலை ஒலிக்கும் மணி சத்தம்,
காத்திருந்த நாளை எழுப்பியது,
அறிவின் விளக்கேற்றிய ஆசான் சொல்,
அகத்தில் தீபம் ஏற்றியது.

நண்பர்கள் சேர்ந்து நடந்த பாதை,
நட்சத்திரம் போல மினுங்கியது,
சிரிப்பு துளிகள் விழும் நேரம்,
சிலிர்க்கும் நினைவாய் மாறியது.

கனவுகள் காகிதத்தில் மட்டும் அல்ல,
கைகளில் வடிவம் கண்டது,
காலம் நகர்ந்தாலும் அந்த நாட்கள்,
கண்ணீரில் கூட இனிமை தந்தது.

கல்லூரி வாழ்க்கை எனும் பாடல்,
காலம் முழுதும் ஒலிக்கும் மனதில்



அ. ஷாலினி
கணிதவியல் துறை
இளங்கலை இரண்டாம் ஆண்டு

## கல்லூரி

கல்லூரி வாசல் கடந்த
நாள் முதல்
கனவுகள் எல்லாம்
கண்முன் வந்தது
நண்பர்கள் சிரிப்பு
நாள்தோறும்
நினைவாக மனதில்
நின்றது...
முதல் நாள் பயம் மெதுவாக
குறைந்து
முடிவில் நம்பிக்கை
மலர்ந்தது
பாட புத்தகம் கையில்
இருந்தாலும்
பாச நட்பு தான் மனதில்
நினைவாக
நிறைந்தது.



சே. கோபிகா
கணினி பயன்பாட்டியல்
முதலாம் ஆண்டு

## Annual Report (2025 - 2026)

A Special lecture was organized on the Title : **Beautification of English Linguistic behaviour by Dr. Muthu Krishnan, Associate Professor & Head, Department of Linguistics, Bharathiyar University, Coimbatore** on **12.08.2025**

Further the Department of English has organized the following competitions under the aegis of Literary Association :

| S.No | Date | Name of the Competition | Topic | Prize Winners |
|---|---|---|---|---|
| 1. | 11.03.2026 | English Elocution | From Print to Pixels : The Future of Reading | 1. K. Agalya - I B.A<br>2. U. Ubendra - II B.A<br>3. S. Annapoorani - III B.A |
| 2. | 11.03.2026 | English Essay Writing | Literature in the Era of Artificial Intelligence | 1. M. Viji - III B.A<br>2. S. Annapoorani - III B.A<br>3. V. Vedhika- III B.A |
| 3. | 12.03.2026 | Poster Making | Climate Change in Modern Writing | 1. T. Sindhu - II MA<br>2. A. Chlorophyll Begam - III BA |

### Student Achievements

T. Ganga Poorani, Ph.D. research scholar and Azhaguvel Parkkavan who completed MA English in 2025 from the Department of English have qualified in NET Exam.

### Ph.D Awarded

| S.No | Name of the Candidate | Topic | Name of the Guide | Date |
|---|---|---|---|---|
| 1. | K. Abilasha | Ecocritical study of Deepak Dalals Adventure Series | Dr.V.R. Jeyasala | 22.12.25 |
| 2. | B. Pushpalakshmi | Fictional World of Jai Shree Mishra : A Critical Study | Dr.G. Somasundaram | 03.02.26 |

### Valedictory Function :

The Valedictory Function for Literacy Association was conducted on 23.03.26 **Dr.D. Leema Davidson,** Assistant Professor of English, Sri Sevugan Annamalai College, Devakottai, delivered a special Lecture and distributed the prizes. On the same day, K. Sivasubramanian, BA,B.L, Alumni of English Department delivered an Interactive Lecture on “Awareness is Power” for the students.

**Students Achievements :**

| S.No | Date | Name of the Competiton | Event | Prize Winners |
|---|---|---|---|---|
| 1. | 26.08.2025 | CM Tropy | Ball badminton | 1. Annapoorani S III BA<br>2. A. Sowndharya III BA<br>3. R.Sobana III BA |
| 2. | 04.02.2026 | Intercollegiate Ballbadminton for Women | Ball badminton | 1. Annapoorani S III BA<br>2. A. Sowndharya III BA<br>3. R.Sobana III BA |
| 3. | 15.10.2025 | Tamil valarchithurai | Essay writing Competion | 1. Annapoorani S III BA |
| 4. | 25.09.2025 | APSA College, Thiruppathur. | Glow Fest (Intercollegiate) Dance<br>Singing<br>Bridal Makeup | 1. Nandhini R, III BA - I<br>2. A. Sowndharya III BA<br>3. S. Annapoorani III BA<br>1. M.Infancia II MA<br>2. K. Deebajothi II MA |
| 5. | 15.12.2025<br>16.12.2025 | Rashtriya Uchachatar Shiksha Abhiyan<br>RUSA 2.0 | Entrepreneurship, Innovation & Career Hub (EIC HUB - ALU) | (Participation) III BA<br>1. Annapoorani S<br>2. Chlorophyll Begam A<br>3. Viji M |
| 6. | 26.12.2025 | Sri Sevugan Annamalai College | Short Story Writing | 4. Annapoorani S<br>III Prize (1500/-) |
| 7. | 27.02.2026 | KIT & KIM<br>KIM FESTO-2026 | Dance III Prize | 1. Vishali (II BA)<br>2. Jerlin Reena<br>3. Indhu<br>4. Srinithi<br>5. Avena |

# தாய்

கல்வி படிப்பையே முடிக்காத அவள்
எனக்காக கல்மண் சுமந்த அவள்
பெற்றது என்னவோ ! உடல் வலியும்
மன வலியும் தான்
ஆனால் அந்த வலியை எக்காலத்திலும்
நான் சுமந்து விடக்கூடாது என
எண்ணி சுட்டெரிக்கும் வெயிலிலும்
காற்றடிக்கும் மழையிலும் அவள்
உழைத்த ஊதியத்தில் எனை
உயர்த்தி உயர்கல்வி வரை
படிக்க செய்து பட்டம் பெற செய்து
என்னைப் பார்த்து அவள் மகிழ்ந்தாள்

**வே. உண்மைநாயகி**
M.Com I



**S. Keerthika**
II M.Com



காரைக்குடி தேசிய மாணவர் படை ஒன்பதாவது பட்டாலியன் சார்பாக அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் இளங்கலை இறுதியாண்டு வரலாறு பயிலும் தேசிய மாணவர் படை மாணவர் வசந்த பாரதி டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் தேசிய மாணவர் படையின் சார்பில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் தொல்லியல் மரபு மன்றத்தின் சார்பாக "சிவகங்கை மாவட்டத் தொல்லியல்" என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் 23.02.2026 வரலாற்றுத்துறையால் நடத்தப்பெற்றது. சிறப்பு விருந்தினர்களாகத் தமிழகத் தொல்லியல் துறை மேனாள் உதவி இயக்குநர் முனைவர் சாந்தலிங்கம் மற்றும் திருப்புல்லாணி தொன்மை பாதுகாப்பு மன்றச் செயலாளர் ராஜகுரு கலந்து கொண்டு உரையாற்றினர். இக் கருத்தரங்கில் இடம்பெற்ற தொல்லியல் பொருட்களின் கண்காட்சியை மாணவ, மாணவிகள் பார்வையிட்டனர்.

அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் வரலாற்றுத் துறையில் நானும் ஒரு டாட்டா என்ற தலைப்பில் தொழில் முனைவோர் பயிலரங்கம் 27.02.2026 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்றது. மதுரை நிகில் பவுண்டேஷன் அமைப்பைச் சேர்ந்த பயிற்சியாளர்களான தலைமை பயிற்சியாளர் குமரகுரு மற்றும் சிவப்பிரகாஷ், மாரீஸ்வரன் ஆகியோர் கருத்தாளர்களாகக் கலந்து கொண்டு தொழில் முனைவோருக்கான தகுதிகள் மற்றும் பண்புகள் குறித்தும், தொழில் முனைவோருக்கு இருக்கும் அரசு கடன் உதவிகள் குறித்தும் எடுத்துக் கூறி பயிற்சி அளித்தனர்.

அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் முதுகலை இரண்டாமாண்டு வரலாற்றுத் துறை மாணவ மாணவியர் கல்விச் சுற்றுலாவாகக் கன்னியாகுமரிக்கும், இளங்கலை மூன்றாமாண்டு மற்றும் முதுகலை முதலாமாண்டு மாணவ மாணவியர் சென்னை மற்றும் மாமல்லபுரம், பாண்டிச்சேரி ஆகிய ஊர்களுக்கும், கல்விச் சுற்றுலாவாகச் சென்று தமிழக சட்டசபை நிகழ்வுகளை நேரடியாகப் பார்வையிட்டனர்.



**R. Subitha**
B.Com I-B








**ஜா. சக்தி பூரணி**
வரலாற்றுத்துறை
இரண்டாமாண்டு

2025 - 2026 ஆம் கல்வியாண்டிற்கான இந்திப் பாடத்தில் முதல் இரண்டு இடம் பெற்றவர்களுக்குப் பரிசுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டன.

**முதலாம் ஆண்டு (இந்தி)**

| எண் | பெயர் | பாடப்பிரிவு | பரிசு |
|---|---|---|---|
| 1. | K.L. காவியன் | I B.Com | முதல் பரிசு |
| 2. | S. காயத்திரி | I B.Sc (Zoo) | இரண்டாம் பரிசு |

**இரண்டாம் ஆண்டு (இந்தி)**

| எண் | பெயர் | பாடப்பிரிவு | பரிசு |
|---|---|---|---|
| 1. | V. அவினா | II B.A (Eng) | முதல் பரிசு |
| 2. | R. ஜெயஸ்ரீ கோமதி | II BBA | இரண்டாம் பரிசு |

**பிற நிகழ்வில் பரிசு பெற்றவர்**

என்.எஸ்.எஸ் அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் மை பாரத் கேன்த்ரா சிவகங்கை மூலம் வித்யாகிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான விகசித் பாரத் யூத் பார்லிமென்ட்டில் வணிகவியல் இரண்டாம் ஆண்டு B. ஸ்ரீநிதி என்ற மாணவி “இந்தியாவின் எமர்ஜென்ஸி காலத்தின் போது நாம் கற்றுக்கொண்ட பாடம்” என்ற தலைப்பில் இந்தியில் பேசி பரிசு பெற்றார்.



## முண்டாசுக் கவிஞனே!

சுதந்திரம் வேண்டும் என்று
சுடர் தீ ஏற்றியவரே!
அச்சமில்லை அச்சமில்லை என்று
துணிவைக் கொடுத்தவரே!
சாதி, மதம் வேண்டாம் என்று
சமத்துவம் பரப்பியவரே!
பெண்கள் கல்விச்சாலை நோக்கி
பயணிக்க அடித்தளமிட்டவரே!
தமிழ் மொழியையும், தமிழ்ப் புகழையும்
எட்டுத்திக்கும் பரப்பியவரே
முண்டாசுக் கவிஞனே
உன் புகழ் ஓங்குக!

## பெண்மை

ஒரு மாத உதிரத்தையே
தாங்கி கொள்ள முடியவில்லை என்னால்,
என் தாயோ ஒன்பது மாத உதிரத்தை
ஒரே நாளில் தாங்கியுள்ளார்கள்
ஏனோ தெரியவில்லை
பெண்மையும், உதிரமும்
இரட்டை சகோதரிகள் போல்
இணைந்தே வாழ்கின்றன!



**அ. காளிமுத்து**
விலங்கியல் துறை
இளங்கலை இரண்டாமாண்டு

பொருளியல் துறையில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள முனைவர் ம. முத்துக்குமார், இணைப்பேராசிரியர் (வரலாற்றுத் துறை) அவர்கள் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றபின் 22.10.2025 அன்று பொருளியல் துறையின் பேரவைத் துவக்க விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக தேவகோட்டை, சேவுகன் அண்ணாமலை கல்லூரியின் மேனாள் முதல்வர், முனைவர் R.M. இராதாகிருஷ்ணன் அவர்கள் பங்கேற்றார்.

1997 - 2000 ஆம் ஆண்டில் பயின்ற முன்னாள் மாணவர்களின் சந்திப்பு நடைபெற்றது. இதில் முன்னாள் மாணவர்கள் துறைத்தலைவர் முனைவர் ம. முத்துக்குமார் அவர்கள் முன்னிலையில் Water Purifier (RO) அன்பளிப்பாக வழங்கினார்கள். இதில் கல்லூரி முதல்வர் அவர்கள் பங்கேற்றார்கள். இத்துறையில் PTA – இல் பணியாற்றிய முனைவர் R. சதிஷ்குமார் என்பார் பரமக்குடி அரசு கலைக்கல்லூரியில் கௌரவ விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். மேலும் புதிதாக செல்வி சொ. மணிமஞ்சுளா என்பார் 16.12.2025 அன்று PTA கௌரவ விரிவுரையாளராகப் பணியேற்றார்.

எமது துறையைச் சேர்ந்த கௌரவ விரிவுரையாளர்களான செல்வி வே. கார்த்திகை மலர் மற்றும் செல்வி எ. கனிமொழி என்பவரும் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நான் முதல்வன் புத்தாக்கப் பயிற்சியில் பங்கேற்றார்கள்.

முனைவர் ம. முத்துக்குமார் துறைத்தலைவர் அவர்கள் சென்னை TNSCHE Meeting – இல் பங்கேற்றார்.

முனைவர் இரா. ஹரிஹரன், உதவிப்பேராசிரியர் அவர்கள் சென்னை, TRB பணியில் கலந்து கொண்டார்.

2024 - 2025 இல் இளங்கலையில் ஒன்பது மாணவர்களும், முதுகலையில் நான்கு மாணவர்களும் பல்கலைக்கழகத் தரவரிசை பெற்றார்கள்.

Industrial Visit தொடர்பான பாடப்பகுதிக்காக காரைக்குடி, ஆவின் பால் பண்ணைக்கு செல்வி. வே. கார்த்திகை மலர் கௌரவ விரிவுரையாளர் அவர்கள் தலைமையில் கௌரவ விரிவுரையாளர்களான முனைவர் மா. திருநீலகண்டன் மற்றும் செல்வி எ. கனிமொழி அவர்களும் மாணவர்களை அழைத்துச் சென்றார்கள்.

13.01.2026 அன்று சமத்துவ பொங்கல் விழா துறைத்தலைவர் மற்றும் பேராசிரியர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் மாணவர்கள் சார்பாகப் பொங்கல் வைத்து கொண்டாடப்பட்டது.

## சமம்

இங்கு
சமம் இல்லாதது
சமதர்மமும் சமத்துவமும்

## காதல்

காதலிக்கும் அனைத்தும்
காயப்படுத்தும்
காயப்படுத்திய அனைத்துமே
உன்னால் காதலிக்கப் பட்டவை.

## மனிதன்

ஒருவரின்
அடையாளம் என்பது
அவர்களின் சாதனையே
தவிர
அவரின் சாமியோ சாதியோ
அல்ல

## நான் பெற்ற செல்வம்

முதல் முறையாக
முகம் தெரியாமல்
நான் நேசித்தவரின்
முகத்தைப்
பார்க்கின்றேன்.

## தனித்துவம்

நூறு தாமரைகள் இருந்தும்
பெருமையும் பேரும் என்னவோ
ஒரு தாமரைக்கு தான்
எப்போதும்.
தாமரைக் குளம் தானே
தவிர
தாமரைகள் குளம் அல்ல

## கனவு



உன்னோடு
நினைத்த வாழ்க்கையை
வாழாவிட்டால்
என்ன
உன் நினைவுகள் போதும்
நான் வாழ்வதற்கு

## நீயும் நீரும்

காற்றோடு கலந்திடு
ஈரப்பதத்தைப் பருகிடு
மேகமாக மாறிடு
மழையாகப் பொழிந்திடு
ஓடையாக ஓடிடு
அருவியாக உயர்ந்திடு
ஆறாகக் கடந்திடு
நதியாக நடைபோடு
கடலாக மையம் கொள்
ஆழ் கடலாக அமைதி பெறு
சமுத்திரமாக நிலைத்து இரு
நீரைப் போல

**த. ஜனனி**
வேதியியல் துறை
மூன்றாமாண்டு

அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் வணிகவியல் துறையில் 2025 - 2026 கல்வியாண்டின் புதிய மாணவர்கள் வரவேற்பு விழா மற்றும் வணிகவியல் துறையின் மன்றத் தொடக்க விழா "BizB/927'25" உமையாள் கலையரங்கத்தில் 24.09.2025 அன்று நடைபெற்றது. ஆடிட்டர் பரத்வாஜ் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். கல்லூரி முதல்வர், வணிகவியல் துறைத் தலைவர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்று நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

வணிகவியல் துறையின் மூன்றாம் ஆண்டு மாணவி அ. சார்மதி 18.12.2025 அன்று சமூகநீதி கண்காணிப்புத் துறை நடத்திய மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் முதல் இடம் சான்றிதழும் ரூபாய் ஒரு லட்சத்திற்கான காசோலையும் பெற்றார். இதனை தமிழ்நாடு பாராளுமன்ற உறப்பினர்களும் மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சரும் இணைந்து வழங்கி சிறப்பித்தனர்.

வணிகவியல் துறையின் இரண்டாம் ஆண்டு மாணவி பா. ஸ்ரீமதி "Viksit Bharat Young Leaders Dialogue Challenge" மாநில அளவிலான போட்டியில் வெற்றிபெற்று தமிழ்நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஜனவரி 9ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை நியுடெல்லியில் நடைபெற்ற தேசிய இளைஞர் விழாவில் (National Youth Festival) கலந்து கொண்டார்.

இவ்விழா டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்றது. மேலும் சிவகங்கை மாவட்டத்திலிருந்து தேர்வு செய்யப்பட்ட ஒரே பங்கேற்பாளராகவும் திகழ்ந்தார். இந்த நிகழ்வின் போது இந்தியாவின் மாண்புமிகு பிரதமர், ஆளுநர், மத்திய அமைச்சர்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகரை நேரில் சந்திக்கும் வாய்ப்பையும் பெற்றார்.

மார்ச் 28ஆம் தேதியன்று மன்ற நிறைவு விழா நடைபெற்றது.

## கடவுள்

என் தவறுகளை நீர் மன்னியும் என்றேன்
உன் தவறுகளை நான் மறந்தேன் என்றார்

என் வாழ்க்கையே போராட்டமாக உள்ளது என்றேன்
ஜெயமோ என்னால் வரும் என்றார்

நான் அனாதையாய் அலைகிறேன் என்றேன்
அரவணைக்க நான் இருக்கிறேன் என்றார்

எத்தனை எத்தனை இன்னல்கள் என்றேன்
அத்தனை அத்தனை இன்பங்கள் என்றார்

நான் பாவியாய் நிற்கிறேன் என்றேன்
உன்னை பரிசுத்தமாக்குவது நானே என்றார்.

**கண் கலங்கி நின்றேன்**
**கரம் கொடுத்து உயர்த்தி விட்டாய்**
**உமக்கு நன்றி!**



**V. Samsvedha**
II B.Sc. Maths

## பேசப்படாத அழகிய உறவு



படிக்கும்போது என் புத்தகமும்,
விளையாடும் போது என் பந்தும்,
தோல்வியில் என் தைரியமும்,
வெற்றியில் என் நண்பனாகவும்
அவளிடம் நான் அடங்காதது
ஏன்? என்ற கேள்வி
ஆனாலும் அவள் மௌனம் தான்
என் எல்லா பதிலும்!

நான் சோர்ந்த நாள் – அவள்
தோளாக நின்றாள்
சிறு பூக்கள் போலே நம்
சண்டைகள் வந்தாலும்
சிறகு சேரும் பனிக்காற்றாய்
நமது பாசம் கலந்துவிடும்
அவளில் நான் – என்னில் அவள்
நம் உறவு – வார்த்தைகள் இல்லா உணர்வு

உலகம் என்னை புரிந்துகொள்ளாமல்
இருந்தாலும் பரவாயில்லை
என்னவள் என்னை புரிந்துகொண்டாள்
போதும் எனக்கு!



**மோ. ஜெயபாரதி**
B.Com II - A



1. திறன் மேம்பாட்டு பயிற்சியானது நமது கல்லூரியில் ரூசா - 2.0. 15 & 16 டிசம்பர் 2025 தேதியில் அழகப்பா திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் சார்பாக மென்திறன் பயிற்சி 200 மாணவ, மாணவிகள் பங்குபெற்று மென்திறன் பயிற்சிச் சான்றிதழ் பெற்றனர்.

2. 22.01.2026 அன்று ஒரு நாள் மென்திறன் பயிற்சி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக S. வினைதீர்த்தான் முன்னாள் ஆயுள் காப்பீடு நிறுவன மேலாளர் & மென்திறன் பயிற்சியாளர் ) அவர்கள் 200க்கு மேலான மாணவ, மாணவிகளுக்குச் சிறப்புரை ஆற்றினார்.

3. 10.01.2026 அன்று 2015 - 2018 Batch இரண்டாம் சுழற்சி, பழைய மாணவ, மாணவிகள் கூட்டம் நடைபெற்றது. அதில் 2015 - 18ல் படித்த மாணவ, மாணவிகள் வெவ்வேறு துறைகளில் பணிபுரிந்து, அவர்களின் பணி அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

4. 30.01.2026 அன்று தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் வழிகாட்டுதலின்படி நமது கல்லூரியின் இளங்கலை மூன்றாமாண்டு மாணவ, மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் **"நிமிர்ந்து நில்"** திட்டம் சார்பாகத் தொழில் முனைவோர்க்கான சிந்தனை உருவாக்கித் தொழில் துவங்கத் திட்டம் மற்றும் ஆலோசனை பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. இதில் 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்குபெற்றுப் பயன் அடைந்தனர்.






**D. Nathiya**
B.Com I Year
B Section





**R. Ramya**
**B.com**
**I -B**






**S. Subhashini**
B.Com II-B
Shift I

Mathematics Association Function was held on 06.03.2026 Dr. P. Vasanthi, Principal of our College Presided over the Function and Dr. R. Roopkumar, Professor, Department of Mathematics Central University of Tamil Nadu, Thiruvarur inaugurated the same. Dr. A. Kavitha, Associate Professor of our department made all the arrrangements for the function.

Our Students Mr. AR. Vinothan of II M.Sc. Maths, Mr. G. Selvakumar and Mr. B. Muneesh Babu of I M.Sc. Maths participated in the state level Quiz Competition held in Alagappa University, Karaikudi on 27th Feb 2026.

Elocution Competition was conducted by our Head of the Department Dr. A. Balasubramaniyan and the staff members Dr. A. Kavitha, Dr. M. Jeyalakshmi and Dr. R. Arimalar on 02nd March 2026 and the Prize Winners were

1. Ms. C. Sathana (I B.Sc. Maths Shift I) - I Prize
2. Ms. C. Abirami (III B.Sc. Maths Shift II) - II Prize
3. Ms. T. Kumarayeekani (II B.Sc. Maths Shift I) - III Prize

On the Same day, Matti Rangoli was conducted by our staff members Mrs. M. Shanmuga Valli, Dr. A. Kavitha, Dr. M. Jeyalakshmi, Dr. V. Chitra and Mrs. S. Nandhini and the Prize winners were

1. Ms. A. Abinaya (III B.Sc. Shift I), Ms. S. Srisubashini (III B.Sc Shift I) - I Prize
2. Ms. S. Shalini (I M.Sc.), Ms. R. Abinaya (I M.Sc.) - II Prize
3. Ms. A. Deepika (III B.Sc. Shift II), Ms. K. Kalaiyarasi (III B.Sc. Shift II) - III Prize

On 03rd March 2026, our staff members, Dr. A. Balasubramaniyan, Dr. CT. Ramasamy and Dr. KR. Nithyakalyani conducted the Mathematical Modelling. Many of our Students participated in the same and the prize winners were

1. Ms. A. Abinaya (III B.Sc. Shift I), Ms. S. Srisubashini (III B.Sc Shift I) - I Prize
2. Ms. S. Poojasri (III B.Sc. Shift I), Ms. S. Nishanthini (III B.Sc. Shift I) - II Prize
3. Ms. S. Ilavendhan (II B.Sc. Shift II), Ms. G. Sakthivel (II B.Sc. Shift II) - III Prize

Quiz Competition was conducted by our staff members Dr. KE. Sathappan and Dr.L. Vijayalakshmi on 04th March 2026 and the prized winners were

Team - I Prize

1. G. Selva Kumar - I M.Sc.
2. A. Abinaya - III B.Sc.
3. A. Nivetha - II B.Sc.

Team - II Prize

1. P. Princy - II M.Sc.
2. K. Kalaiyarasi - III B.Sc.
3. A. Anougragalakshmi - II B.Sc.

Team - III Prize

1. AR. Vinothan - II M.Sc.
2. K. Gayathri - III B.Sc.
3. H. Parveen - II B.Sc.

2025 - 2026 ஆம் ஆண்டு அழகப்பா அரசு கலைக்கல்லூரி இயற்பியல் துறை சார்பாக 08.01.2026 அன்று "நாட்டுபுற தோசையும் நானோ டெக்னாலஜியும்" என்ற தலைப்பில் ஒரு நாள் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. இதில் மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரி இயற்பியல் துறைத் தலைவர் முனைவர் மகேந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். நமது கல்லூரியின் இயற்பியல் துறை மற்றும் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியின் இயற்பியல் துறைகளுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.


07.02.2026 அன்று நம் கல்லூரி அனைத்து அறிவியல் துறைகளுக்கும் காரைக்குடி அழகப்பா பல்கலை கழகத்தால் இசைவுபெற்ற மெய்யா ஆய்வகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இயற்பியல் துறையின் சார்பில் முதுகலை இயற்பியல் இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவியர்கள் 26 பேரும் இளங்கலை இயற்பியல் மூன்றாம் ஆண்டு மாணவ மாணவியர் (சுழற்சி I மற்றும் II) 75 பேரும் மற்றும் நான்கு பேராசிரியர்கள் இரண்டு ஆய்வக உதவியாளர்களுடன் 17.2.2026 முதல் 19.2.2026 வரை மூன்று நாட்கள் கல்வி சுற்றுலாவாகப் பெங்களூரு மற்றும் மைசூரு ஆகிய இடங்களுக்கு சென்று வந்தனர்

13.03.2026 அன்று மாநில அளவிலான ஒருநாள் (Advanced Physics - 2026) கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கில் முனைவர் C.K. மகாதேவன் M.Sc., PH.D., D.Sc (CSIR- Emeritus Scientist) முனைவர் M.சார்லஸ் ராபர்ட் M,Sc., M.Phil., Ph.D., இணைப்பேராசிரியர் மற்றும் Dean Research, இயற்பியல் துறை ஹாஜி கருத்த ராவுத்தர் ஹைடியா கல்லூரி, உத்தமபாளையம் மற்றும் திரு. S. ஹரிராம கிருஷ்ணன் முதுநிலை ஆராய்ச்சியாளர், CSIR - CECRI காரைக்குடி ஆகியோர் கருத்தரங்கில் கலந்து கொண்டு வெவ்வேறு தலைப்புகளில் உரையாற்றினார்கள்.

இந்த கருத்தரங்கில் எமது துறைப் பேராசிரியர் முதுகலை இயற்பியல், இளங்கலை இயற்பியல் மற்றும் பிற கல்லூரி இயற்பியல் மாணவ மாணவியர்கள் உட்பட சுமார் 375 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நன்றி.





**M. Yazhini**
B.Com II B





**R. Sathiya Priya**
B.Com II Year
Shift I -B

அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி வேதியியல் துறை சார்பாக 2025 -2026 கல்வியாண்டிற்கான வேதியியல் மன்ற தொடக்க விழா 09.03.2026 அன்று கல்லூரி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியின் தொடக்கமாக வேதியியல் துறைஇணைப்பேராசிரியர் முனைவர் நா. ராதா வரவேற்புரையாற்றினார்.

கல்லூரி முதல்வர் முனைவர் ப. வசந்தி அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கித் தமது தலைமை உரையில் மாணவர்கள் கல்வியுடன் சேர்ந்து அறிவியல் ஆராய்ச்சி மனப்பான்மையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், வேதியியல் துறையில் உள்ள பல்வேறு வாய்ப்புகளை அறிந்து கொண்டு எதிர்காலத்தைத் திட்டமிட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் வேதியியல் துறையின் தலைவர் முனைவர் எம். லட்சுமி சிறப்பு விருந்தினர் அவர்களை பற்றிய அறிமுக உரையாற்றி அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக CSIR - மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவனம் (CECRI) காரைக்குடியில் Scientist - F மற்றும் ACSIR பேராசிரியராகப் பணியாற்றும் முனைவர் A. சுப்பையா அவர்கள் கலந்து கொண்டு “Chemistry Graduation க்கு பிறகு என்ன?” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். தனது உரையில் வேதியியல் பட்டப்படிப்பு முடித்த மாணவர்களுக்கு கிடைக்கும் உயர்கல்வி வாய்ப்புகள், ஆராய்ச்சி துறைகள், தொழில் வாய்ப்புகள், போட்டித் தேர்வுகள் மற்றும் அறிவியல் துறையில் முன்னேறுவதற்கான வழிகள் குறித்து மாணவர்களுக்குப் பயனுள்ள விளக்கங்களை வழங்கினார். அவரது உரை மாணவர்களுக்கு மிகவும் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்தது. நிகழ்ச்சியின் இறுதியில் முனைவர் A. நாகேந்திரன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், வேதியியல் துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்கள்.

# பசுமை வேதியியல் - நாளைய உலகிற்கான நம்பிக்கை

வேதியியல் என்பது மாற்றத்தின் அறிவியல். ஆனால் அந்த மாற்றம் இயற்கைப் பாதிப்பு இல்லாததாக இருக்க வேண்டும் என்பதையே பசுமை வேதியியல் வலியுறுத்துகிறது. விஷமற்ற வேதிப்பொருட்கள், குறைந்த கழிவுகள், சக்தி மிச்சப்படுத்துதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க வளங்களின் பயன்பாடு ஆகியவையே இதன் அடிப்படை நோக்கங்கள்.

இன்றைய உலகில் சுற்றுச்சூழல், மாசு, காலநிலை மாற்றம், வளங்களின் தட்டுப்பாடு போன்ற சவால்கள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய சூழலில், அறிவியலின் வளர்ச்சி இயற்கையைக் காக்கும் பாதையில் இருக்க வேண்டும்.

மாணவர்களாகவும் எதிர்கால விஞ்ஞானிகளாகவும் நாம் நினைவில் கொள்ள வேண்டியது ஒன்று.

அறிவின் உயரம் அதன் பொறுப்புணர்வில் தான் உள்ளது.

இன்றைய பசுமை வேதியியல் முயற்சிகள், நாளைய தலைமுறைக்கு ஆரோக்கியமான பூமியை வழங்கும்.

“விஷமற்ற வினை,
பாதுகாப்பான பயணம்,
பசுமை சிந்தனை, பூமிக்கு நல்வாழ்வு
அறிவும் இயற்கையும் கை கோர்த்தால்
நாளைய உலகம் நிச்சயம் சிறக்கும்”


முனைவர் **நா. ராதா**
இணைப்பேராசிரியர்
வேதியியல் துறை


**Report on the Activities of Computer Science Department during the Academic year 2025 - 2026.**

Department of Computer Science encourages the students to participate in various competitions in other colleges. Seminars / Competitions / Quiz / Paper Presentation participated by our students.

| S.No. | Name | College | Program | Date | Prize |
|---|---|---|---|---|---|
| 1. | V. Nithya shree | Alagappa University | International Conference On Recent Trends In Computer Science - RTCS 2026 | 29 & 30 JAN - 2026 | Participate/ Presented a Paper |
| 2. | R. Jeyamani | Alagappa University | International Conference On Recent Trends In Computer Science - RTCS 2026 | 29 & 30 JAN - 2026 | Participate/ Presented a Paper |
| 3. | S. Murugesan | Alagappa University | International Conference On Recent Trends In Computer Science - RTCS 2026 | 29 & 30 JAN - 2026 | Participate/ Presented a Paper |
| 4. | L. Logeshwaran | Alagappa University | International Conference On Recent Trends In Computer Science - RTCS 2026 | 29 & 30 JAN - 2026 | Participate/ Presented a Paper |
| 5. | A. Rubina | Alagappa University | International Conference On Recent Trends In Computer Science - RTCS 2026 | 29 & 30 JAN - 2026 | Participate/ Presented a Paper |
| 6. | P. Dharshini | Alagappa University | International Conference On Recent Trends In Computer Science -RTCS 2026 | 29 & 30 JAN - 2026 | Participate/ Presented a Paper |
| 7. | J. Selva Ganapathy | Alagappa University | International Conference On Recent Trends In Computer Science - RTCS 2026 | 29 & 30 JAN - 2026 | Participate/ Presented a Paper |
| 8. | S. Gowsalya | Alagappa University | International Conference On Recent Trends In Computer Science - RTCS 2026 | 29 & 30 JAN - 2026 | Participate/ Presented a Paper |
| 9. | S. Murugesan | 20th Mardani Khal National Ashtedu Akhada Championship 2025 - 2026, Tamilnadu Ashtedu Akhada Association | Akshaya Institutions Kinathukadavu | 07 & 08 FEB - 2026 | First |
| 10. | V. Nithya Shree | Govt. Arts College For Women, Sivagangai | Tech Fest - 2026 State Level Inter Collegiate Meet | 06 FEB - 2026 | Participation |

| S.No. | Name | College | Programe | Date | Prize |
|---|---|---|---|---|---|
| 11. | P. Sowntharya Devi | Govt. Arts College For Women, Sivagangai | Tech Fest - 2026 State Level Inter Collegiate Meet | 06 FEB - 2026 | Participation |
| 12. | M. Shanmathi | Govt. Arts College For Women, Sivagangai | Tech Fest - 2026 State Level Inter Collegiate Meet | 06 FEB - 2026 | Participation |
| 13. | K. Thrisha | Govt. Arts College For Women, Sivagangai | Tech Fest - 2026 State Level Inter Collegiate Meet | 06 FEB - 2026 | Participation |
| 14. | M. Indhumadhi | Govt. Arts College For Women, Sivagangai | Tech Fest - 2026 State Level Inter Collegiate Meet | 06 FEB - 2026 | Participation |
| 15. | S. Murugesan | Tamil Nadu Chief Minister's Trophy Games 2025 | State Level Competition -Tnpesu-Silambam | OCT - 2025 | Participation |
| 16. | S. Murugesan | Tamil Nadu Chief Minister's Trophy Games 2025 | District Level Competitions Tnpesu-Silambam | SEP - 2025 | Gold Medal |





**D. Hashini**
B.Com I



# நட்பு

அறிமுகம் இல்லாமல் வந்தோம்
அடிக்கடி பேசிக்கொண்டோம்
உறவுகளுக்கு மேலே
உயிர் ஆனோம் காலங்கள்
கடந்து சென்றாலும்
கடைசி வரை தொடரவேண்டும்
நம் நட்பு....


காரணம் இல்லாமல் கலைந்து போக
இது கனவு இல்லை...
காரணம் சொல்லி பிரிந்து போக
இது காதலும் இல்லை...

உயிர்
உள்ளவரை
தொடரும்

உண்மையான
நட்பு ....!!!



**P. Kalaiselvi**
II B.com



## Report on the Activities of Computer Applications during the Academic year 2025 - 2026.

Department of Computer Science encourages the students to participate in various competitions in other colleges.

The following is the list of students participated in various events of other Colleges and the Prized they won.

| S.No. | Name | College | Class | Event | Prize |
|---|---|---|---|---|---|
| 1. | R. Kaviya | Veerakaviyarasar Mudiyarasanaar Parisu Pottigal (Alagappa University Fine Arts) - Karaikudi | III BCA | Speech | Third |

The following list of students are participated in TECHNOVA 2K25 on 27 & 28 March 2025 organized by Department of Computer Science, Alagappa University Karaikudi. Won OVERALL CHAMPIONSHIP TROPHY.

| S.No. | Name | Class | Event | Prize |
|---|---|---|---|---|
| 1. | R. Kaviya | III BCA | Quiz | Winner |
| 2. | B. Praveen | III BCA | Quiz | Winner |
| 3. | R. Mehar Jothi | III BCA | Paper Presentation | Winner |
| 4. | R. Kanishka | III BCA | Paper Presentation | Winner |
| 5. | R. Mehar Jothi | III BCA | Spell Bee | Winner |
| 6. | R. Kanishka | III BCA | Spell Bee | Winner |
| 7. | A. Hemalatha | II BCA | Connection | Winner |
| 8. | M. Rija Barhin | II BCA | Connection | Winner |
| 9. | S. Swetha | II BCA | Connection | Winner |
| 10. | S. Naveen | III BCA | Paper Presentation | Runner |
| 11. | S. Alagusundaram | III BCA | Paper Presentation | Runner |
| 12. | S. Periyasamy | III BCA | Photography | Winner |
| 13. | N. Ravivarma | III BCA | Photography | Winner |
| 14. | P. Archanadevi | III BCA | Singing | Winner |
| 15. | J. Lumina Jaicy | III BCA | Rapid Keys | Winner |

The following list of students are participated in TECHFEST 2K26 on 04.03.2026 organized Alagappa Institute of Skill Development, Alagappa University Karaikudi and Won OVERALL CHAMPIONSHIP TROPHY.

| S.No. | Participants | Year | Event Name | Position |
|---|---|---|---|---|
| 1. | M. Rija Barhin | II BCA | Cosmo Connect | Runner |
| 2. | A. Hemalatha | II BCA | Cosmo Connect | Runner |
| 3. | R. Padmavathi | II BCA | Capture the Flag | Runner |
| 4. | M. Vimala | II BCA | Capture the Flag | Runner |
| 5. | K. Swasthika | II BCA | Retro Code | Runner |
| 6. | R. Mehar jothi | II BCA | AdZap | Winner |
| 7. | R. Kaviya | III BCA | AdZap | Winner |
| 8. | N. Ravi Varma | III BCA | AdZap | Winner |
| 9. | A. Senbagavalli | II BCA | AdZap | Winner |
| 10. | P. Subha Sree | II BCA | AdZap | Winner |

| S.No. | Participants | Year | Event Name | Position |
|---|---|---|---|---|
| 11. | S. Naveen | III BCA | Diamond Docs | Winner |
| 12 | B. Rahul | II BCA | Diamond Docs | Winner |
| 13 | S. Alagusundaram | III BCA | Mine Your Ideas | Winner |
| 14 | L. Pravinjan | III BCA | Mine Your Ideas | Winner |
| 15 | S. Periyasamy | III BCA | Lens Cape | Winner |
| 16 | A. Anbarasi | I BCA | Code Drama | Runner |
| 17 | K. Elakkiya | I BCA | Code Drama | Runner |
| 18 | S. Gobika | I BCA | Code Drama | Runner |

## தமிழ்

என் தாய்மொழியான தமிழை வணங்குகின்றேன்!
தமிழே நீ தாம் எம் மூச்சு
நீ இல்லையேல் எமக்கில்லை பேச்சு
தனி மொழியே, மூத்த மொழியே
முத்தமிழான உன்னை முடிதாழ வணங்குகின்றோம்
இளமையான மொழியே, இனிமை தரும் மொழியே
செந்தாமரை போன்ற செந்தமிழே!
பார் போற்றும் பைந்தமிழே!
பாடல் பல நீ கொண்டாய்
விரலால் உன்னைத் தழுவி
நாவால் உன்னைச் சுவைக்க
இதழால் உன் புகழ் போற்றுகிறோம்.

## சகோதரன்



ஒரு வயிற்றில் பிறந்து
ஓராயிரம் சண்டையிட்டு
அன்பிற்கு இனியவனாய்
அண்டம் போற்றும் சகோதரனாய்
உயர்வாய் நீ!...





**த. உலககவியரசி**
B.Com.,
I -B

## முயற்சி

வலிகள் இல்லாமல் வழிகள் இல்லை
விழிகள் மூடினால் வெற்றிகள் இல்லை
முயற்சி இல்லாமல் மகிழ்ச்சி இல்லை
முயன்ற மனிதன் தோற்றது இல்லை
கோபம் கொண்டால் உறவு இல்லை
பாவம் செய்தால் பரிவு இல்லை
ஆசை கொண்டால் உறக்கம் இல்லை
அமைதி கொண்டால் அகிம்சையே எல்லை!!

சரித்திரம் ஒரு முறை உன் பேரைச்
சொல்ல வேண்டும் என்றால்
நீ பல முறை என்னிடம் வர
வேண்டும் இப்படிக்கு
"முயற்சி"







**M. Juhaina Safrin**
B.Com
II - A

The PG & Research Department of Botany actively organized several academic trainings, workshops and extension activities during the academic year 2025 - 2026 to enhance students knowledge and practical skills in plant science and environmental awareness.

**Students Achievements**

**Proficiency prize winner for the academic year 2025 - 2026**

| Class | Student Name | Proficiency Prize |
|---|---|---|
| I UG | L. Jamuna | First |
| I UG | M. Santhoshini | Second |
| I UG | K. Kowsalya | First |
| I UG | M. Prethika | Second |
| II UG | M. Pragadheshwari | First |
| II UG | M. Karpagam | Second |
| III UG | C. Divya shree | First |
| III UG | R. Madhubala | Second |
| I PG | A. Anitharani | First |
| I PG | M. Sundaram | Second |
| II PG | M. Hajira Sumaiya Begam | First |
| II PG | N. Abirami | Second |

Our III B.Sc student **Miss. S. Sathyapriya** won the intercollegiate overall best presentation award for Naan Mudhalvan Course **(Hekathon)** and medal for second place.

**Department Acitivies**

As per the Government instructions, the **SECOND SHIFT of the undergraduate programme** in Botany was introduced during the academic year 2025 - 2026. This Initiative helped to increase student enrollment and provided opportunities for more students to pursue higher education in Botany.

A **Parent - Teacher Association (PTA) meeting** for second - year and third - year students was conducted on 12 August 2025. The meeting focused on academic progress, student welfare and strengthening communication between parents and faculty members.

The department encouraged experiential learning through field visits and educational tours. From **24 September 2025 to 26 September 2025,** third year undergraduate students visited tribal areas to study the **lifestyle of tribal communities, the plants used in their daily life and plant biodiversity.** This visit provided students with an understanding of traditional knowledge related to plants and natural resources.

Students of the department also participated actively in the **college cultural festival competitions.** In the event titled **"Ovvoru Pookalum", Ms. D. Swathi,** M.Sc., First Year, secured the **Second Prize,** while **Ms. M. Sundaram,** also an M.S.c. **First Year** student, secured the First Prize, bringing recognition to the department.

As part of environmental awareness initiatives, seed balls and palmyra seeds were distributed to the students on 15 September 2025 to encourage tree planting and biodiversity conservation.

To promote research exposure, **M.Sc. First Year students visited the** Central Electrochemical Research Institute on 26 September 2025. The visit helped students understand advanced research activities and scientific instrumentation.


The **Botany Association Function** was conducted on **16 October 2025.** The special guest, **Dr.B. Guruprasad,** Assistant Professor from Alagappa Chettiar Government College of Engineering and Technology, delivered a lecture on **"Solar Hydroponic System"** and explained its working principles, advantages and applications in sustainable agriculture.

Skill Development programmes were also organized for students. On **11 December 2025, Mushroom Cultivation Training** was conducted for Botany students. The training included both theoretical and practical sessions and was delivered by **Dr. M. Murugan,** Guest Lecturer, Department of Botany. The programme helped students learn modern techniques of mushroom cultivation and its economic benefits.

On **12 December 2025,** students received **horticulture training,** which provided knowledge about plant propagation, garden management and sustainable gardening practices.

Further, on **13 December 2025,** Botany students participated in a **workshop on "Traditional Scientific Documentation and Knowledge Development Awareness"** organized at Jamal Mohamed College. The workshop enhanced students' understanding of documenting traditional knowledge and scientific practices.

To provide field exposure to postgraduate students, and **educational tour** was organized on **16 February 2026** to Munnar, Valparai and Theni. During this tour, students studied **plant biodiversity and ecological diversity** of the hill ecosystems. They also visited a **tea factory** to learn about tea processing techniques and observed **grape vineyards** gaining practical knowledge of plantation crops and agricultural practices.



## இயற்கை

சாரல் மழையில் நனைந்தக் காற்று
தென்றலாய்ச் சில்லிடுகிறது!
மழைநீர் கொட்டும் சத்தம்
புதியதொரு இசையமைக்கிறது
மலர்களெல்லாம் நீரில் நனைந்து
தலையாட்டிப் புன்னகைக்கிறது!

எல்லோர் மனதும்
மழையில் நனையவே
மன்றாடிக் கெஞ்சுகிறது!
பல மைல் தூரம் கடந்துவரும்
இந்த நீர்த்துளிகள்
தேவனின் தீர்த்தமாகவும் இருக்கலாம்



**நா. சிரஞ்சீவி**
I B.Com-A
I Shift

## அம்மா

நான் அழுதபோது என்னை
சிரிக்க வைத்த முகம்...
என்றுமே என்னை
வெறுக்காத கணம்...
தவறுகளை மன்னிக்கும் மணம்...
அளவுகளே இல்லாத பாசம்...
மற்றவர்கள் காட்டிடாத நேசம்

அனைத்தையும் உன்னிடம்
கண்டேன் அம்மா...
அழுவதற்கு கண்கள்...
அணைப்பதற்கு கைகள்...
சாய்ந்து கொள்ள தாயின் மடிபோதும்
எனக்கு உயிர்தந்த உன்னை
என் உயிர் உள்ளவரை மறவேனோ...



**A. Revathi**
B.Com II-B





**R. Ramya**
B.Com
I-B

# விலங்கியல் துறை

அழகப்பா அரசு கலைக் கல்லூரி விலங்கியல் துறையில் 1947-இல் இளம் அறிவியல் படிப்போடு துவங்கப்பட்ட இத்துறை பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி துறையாக விரிவடைந்துள்ளது. துறைத் தலைவர் மற்றும் 9 பேராசிரியர்கள் கொண்ட இத்துறையில் 160 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

துறைத் தலைவரை தலைவராகக் கொண்ட விலங்கியல் மன்றத்திற்குச் செயலாளராக முனைவர் எஸ்.எஸ்.என். சோமசுந்தரம் அவர்களும் மாணவர்களின் செயலாளராக செல்வி ட. முத்துலட்சுமி மற்றும் இணைச் செயலாளராக செல்வி R. பவித்ரா மற்றும் S. ஐஸ்வர்யா, T. விஜிதா மற்றும் P. ரஞ்சனி ஆகியோர் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இத்துறையில் இக்கல்வியாண்டில் கீழ்க்கண்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

| வ. எண் | நாள் | நிகழ்வு | தலைப்பு | சிறப்பு விருந்தினர் |
|---|---|---|---|---|
| 1. | 24.06.2025 | வேலைவாய்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி | பட்டதாரி மாணவர்களுக்கான வேலைவாய்ப்புகள் | Miss S. சுவாதி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை அலுவலர் சிவகங்கை |
| 2. | 24.09.2025 | மன்ற துவக்க விழா மற்றும் கருத்தரங்கம் | மீன் வளர்ப்பின் புதிய தொழில் நுட்பங்கள் | Dr.N. அழகப்பன் M.F.C., PH.D மத்திய அறிவியல் ஆராய்ச்சி நிலையம் குன்றக்குடி |
| 3. | 27.12.2025<br>28.12.2025 | வனத்துறை பயிற்சி | நீர்ப் பறவைகள் கணக்கெடுப்பு மற்றும் கள ஆய்வு | வன அலுவலர் வேட்டக்குடி சிவகங்கை மாவட்டம் |
| 4. | 05.03.2026<br>06.03.2026 | கள ஆய்வு | காடுகள் மற்றும் உபகளிகங்கள் சுற்றுப்புறச்சூழல் ஆய்வு | வாகமான் மற்றும் கொச்சி கேரளம் |


மேலும் இக்கல்வியாண்டில் மூன்று கௌரவ விரிவுரையாளர்கள்

1. முனைவர் S. சுதந்திரகண்ணன், 2. முனைவர் S. தங்கபாண்டியன், 3. முனைவர் P. சசிகலா ஆகியோர் இத்துறைக்குபணி அமர்த்தப்பட்டனர்.

முனைவர் S. பாஸ்கர சஞ்சீவி, இணைப் பேராசிரியர் கும்பகோணம் அரசு கலைக்கல்லூரியிலிருந்து (தன்னாட்சி) பணி மாறுதல் பெற்று 02.02.2026 முதல் இத்துறையில் பணியேற்று வருகிறார் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.



**N. Jaseera Parveen**
B.A. History
II Year



காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் புவிஅமைப்பியல் துறையில் 2025 - 2026 ஆம் கல்வியாண்டில் பல்வேறு கல்விசார் நிகழ்வுகள் நடைபெற்றன. அவ்விவரங்கள் பின்வருமாறு

| கல்லூரிக்கு வெளியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் புவிஅமைப்பியல் துறை மாணவர்களின் பங்களிப்பு / சாதனைகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | நிகழ்ச்சி | நிகழ்ச்சி நடைபெற்ற நாள் | நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு | பங்கேற்ற கல்லூரிகளின் எண்ணிக்கை | புவி அமைப்பியல் துறையிலிருந்து பங்கேற்ற மாணவர்களின் எண்ணிக்கை | பங்களிப்பு / சாதனை |
| 1. | International Moon day | 06.08.2025 | தேசிய கல்லூரி திருச்சி | 12 | 05 | இரண்டாம் பரிசு |
| 2. | Geocastle -2<br>5 | 10.10.2025 | அரசு கலைக் கல்லூரி கோயம்புத்தூர் | 13 | 12 | முதல் பரிசு |

## INTERNATIONAL MOON DAY






## GEOCASTLE - 2025



புவியமைப்பியல் துறையின் முன்னாள் மாணவர்களின் சிறப்புரை / கலந்துரையாடல்

| வ. எண் | நிகழ்வு | நாள் | தலைமை விருந்தினர் / நிபுணரின் பெயர் மற்றும் முகவரி | நிகழ்வின் தலைப்பு / நோக்கம் | கலந்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | ஊடாடும் அமர்வு | 19.09.2025 | திரு. ஆர். விஜயராகவன் (1999 - 2002) துணை இயக்குனர், புவி அமைப்பியல் மற்றும் சுரங்கத்துறை சிவகங்கை | புவி அமைப்பியல் பாடப்பிரிவில் வேலை வாய்ப்பு | 40 |
| 2. | ஊடாடும் அமர்வு | 11.12.2025 | டாக்டர் ஜே. பிரான்சிஸ் லாரன்ஸ் (1971 - 1974) முன்னாள் மாணவர் சங்கத் தலைவர், புவியமைப்பியல் துறை, அழகப்பா அரசு கலைக் கல்லூரி, மேனாள் பேராசிரியர், மாநிலக் கல்லூரி சென்னை எஸ்.ஜே. வால்டர் சுந்தர் சிங் (1977 - 80 பேட்ச்) | புவி அமைப்பியல் மாணவர்களுக்கு அரசு வேலை வாய்ப்புகள் மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சி | 40 |
| 3. | ஊடாடும் அமர்வு | 22.12.2025 | பேராசிரியர் டாக்டர் பிரசன்னா மோகன் விஸ்வநாதன், பயன்பாட்டு அறிவியல் துறைத் தலைவர், கர்டின் பல்கலைக்கழகம் | புவி அமைப்பியல் மாணவர்களுக்கு வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்புகள் குறித்து விளக்கம் | 120 |
| **திருமதி. மீனாக்ஷி பஞ்சநதம் நினைவு அறக்கட்டளை தொடக்கவிழா** | | | | | |
| வ. எண் | நிகழ்வு | நாள் | தலைமை விருந்தினர் / நிபுணரின் பெயர் மற்றும் முகவரி | நிகழ்வின் தலைப்பு / நோக்கம் | கலந்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை |
| 1. | திருமதி மீனாக்ஷி பஞ்சநதம் நினைவு அறக்கட்டளை தொடக்க விழா | 12.03.2026 | கல்லூரி முதல்வர் முனைவர் ப. வசந்தி, முனைவர் ப. நாச்சியப்பன் நீர் திட்டமிடல் மற்றும் சேவைகள் துறை, ஆஸ்திரேலியா முனைவர் ப. உதயகணேசன், துறைத் தலைவர் மற்றும் முன்னாள் மாணவர்கள் | அழகப்பா அரசு கலைக் கல்லூரி புவி அமைப்பியல் துறையில் இளநிலையில் அதிக மதிப்பெண் பெற்று முது அறிவியல் படிப்பைத் தொடரும் மாணவருக்கும் முது அறிவியலில் முதல் மதிப்பெண் பெறும் மாணவருக்கும் தலா ரூ.15,000/- பரிசுத் தொகை வழங்கும் பொருட்டு | 120 |

2025-2026 ஆம் கல்வியாண்டிற்கான அழகப்பா பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையிலான Football, Hockey, Badminton, Chess, Ball Badminton Kho - Kho மற்றும் தடகளம் ஆகிய போட்டிகளில் அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் மாணவ மாணவி அணியினர் வெற்றிபெற்றுள்ளனர். மேலும் இக்கல்வியாண்டில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான பல்வேறு விளையாட்டு போட்டிகளில் அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் அணியினர் கலந்து கொண்டு மொத்த பரிசுத் தொகையாக ரூ.2,04,000/- பெற்றுள்ளனர். தமிழக அணிக்காக நமது கல்லூரிகளில் 2 வீரர்களும், அகில இந்திய பல்கலைக்கழக அணிகளுக்கு 6 வீரர்களும், தென் மண்டல பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான போட்டிகளில் 30 வீரர்களும் மாநில அளவிலான போட்டிகளில் 34 வீரர்களும் இவ்வாண்டு பங்கு பெற்றுள்ளனர். அழகப்பா அரசு கலைக் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தால் சுமார் 4 இலட்சம் மதிப்பில் இறகு பந்து மைதானத்திற்கான கான்கிரீட் தளம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

## TAMIL NADU STATE PARTICIPATION 2025 - 2026



**G. Nandha**
I B.A History
Cycling



**S. Murugesan**
II M.Sc Computer Science
Ashtedu Akhada

## 78th AGAC Athletic Meet 2026 Athletic Individual Champions



**S. Aiswarya**
I M.A. Economics



**K. Velmurugan**
I M.Sc Physics

## ALL INDIA LEVEL PARTICIPATION 2025 - 2026



**K. Manikanda Sethupathi**
III B.Com
Fencing



**I. Prathicksha**
IL, B.Sc., Com., Sci
Pencak Silat



**C. Kathirvel**
III, B.A Economics
Ball Badminton



**R. Ragavan**
II, B.Sc., Geology
Ball Badminton



**M. Santhosh Kumar**
III, B.A Economics
Ball Badminton



**P. Anusha**
I, M.A Tamil
Ball Badminton

## UNIVERSITY PARTICIPATION MEN 2025 - 2026



**S. Radha Krishnan**
III, B.Com.,
Chess



**U. Vinoth Kumar**
III, B.Sc Maths
Chess



**M. Dharshan**
II, B.Sc Geology
Tennis



**M. Sivakumar**
II, B.A Economics
Hockey



**S. Suryaa**
I, B.A Economics
Hockey



**K. Prem Kumar**
II, BBA
Hockey



**M. Deepak Kumar**
IL, B.Com.,
FootBall



**P. Siva Raja**
II, B.Sc., Chemistry
FootBall



**S. Alameen**
I, B.A Economics
Badminton



**M. Dhavanesh**
I, M.A English
Badminton



**C. Raaghul**
I, M.A English
Badminton



**M. Bharath Kumar**
III. B.Sc., Geology
Cricket

## UNIVERSITY PARTICIPATION WOMEN 2025 - 2026



**J. Anjali**
II, B.Com.,
Cricket



**R. Jaishree Gomathi**
II, BBA
Cricket



**M. Sakthi Meena**
II, B.A Tamil
Kabaddi



**J. Priyanga**
I, B.Com
Volley Ball



**K. Sathiya**
I, B.Sc Botany
Volley Ball



**S. Nivetha**
II, B.Sc Maths
Badminton



**M. Kavithaini**
II, B.Sc Chemistry
Hockey



**M. Elaveni**
II, B.CA
Hockey



**S. Ananthi**
III, B.A Tamil
Hockey



**S. Pushpakala**
I, BBA
Hockey



**S. Mangaleeswari**
III, B.Com
FootBall



**C. Ishwarya**
III, BCA
FootBall



**P. Priyadharshini**
I, B.A English
FootBall, Hand Ball &
Kho-Kho



**AL. Karthika Devi**
III, B.Com
FootBall



**J. Jayanthi**
III, B.A. Tamil
HandBall



**B. Mareeswari**
III, B.A. Tamil
HandBall

# Alagappa University Inter Collegiate Tournament - 2025 -2026


Chess Winners


Ball Badminton Runners


Foot Ball Runners


Badminton Runners

CSK - SDCA TROPHY
CRICKET RUNNERS




Hand Ball Runners



Volley Ball Runners


Chess Runners





அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் பொது நூலகத்தின் வாயிலாக 2025-2026 ஆம் கல்வி ஆண்டிற்காக ரூ.3,90,000.00 மதிப்புத் தொகையில் 959 புத்தகங்கள் மற்றும் 3 பருவ இதழ்கள் வாங்கப்பெற்று அவை இக்கல்லூரியிலுள்ள அனைத்துத்துறைசார்ந்த நூலகங்களுக்கும் பிரித்து வழங்கப்பட்டுள்ளன. மேலும் மாணவர்கள் தங்கள் துறை சார்ந்த புதுத் தகவல்களைத் தெரிந்துகொள்வதற்கு ஏதுவாக ONOS (One Nation One Subscription) என்ற இந்திய அரசின் நிதியுதவியின் கீழ் இணையவழி பருவ இதழ்கள் பயன்படுத்துவதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாணாக்கர்கள் போட்டித் தேர்வுகளுக்குத் தங்களைத் தயார்ப்படுத்தும் பொருட்டு நாளிதழ், பருவ இதழ்கள் படிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளது. நூலகத்தைக் கணினிமயமாக்கும் பொருட்டு புதிதாக நூலக மென்பொருள் பொருத்தப்பட்டு அதுசார்ந்த பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களின் கற்றல் மேம்பாட்டிற்காக இணைய வழிப் பயன்பாட்டிற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.

# வெற்றி

தோல்வியடைந்தால் திட்டத்தை மாற்றுங்கள்
இலக்கை ஒரு போதும் மாற்றக் கூடாது
இலக்கு ஒன்றே நினைவில்......
வாழ்க்கையில் இறைவன் நமக்குக்
கொடுத்திருப்பது வெற்றிக் காகிதம் !
அதில்
எழுதுவதோ, வரைவதோ இல்லை கிழிப்பதா
என்பது,
நம் கையில் தான்.....
நீ ஒதுக்கப்படும் இடங்களில்
நிமிர்ந்து நில்....
நீ புகழப்படும் இடங்களில்
அடக்கமாய் நில்....
நீ விமர்சிக்கப்படும் இடங்களில்
மௌனமாய் இரு....
நீ நேசிக்கப்படும் இடங்களில்
அன்புடன் இரு....
உலகம் உன் வசப்படும் !!!

**R. மகா காளீஸ்வரி**
M.Com I

# ஆசிரியர்

அனைவருக்கும் கல்வியை
ஆர்வமாய் கற்பித்து
இனிய அணுகுமுறையில்
ஈடுபாட்டுடன் பணி செய்து
உயர்த்தும் குறிக்கோளை
ஊருக்கெல்லாம் தெரியப்படுத்தும்
எளிமைக்கு இலக்கணமான
ஏணிப்படி நீர்தான் !
ஐயமே இல்லை
ஒளிமிகு பாரதத்தை
ஓங்கச் செய்யும்
ஔவை வழி நடப்பவரும் நீர்தான்
அஃதே ஆசானின் பெருமை....

உலகில் இரண்டு விதமான
இடங்கள் உண்டு....
ஒன்று தாயின் கருவறை
இன்னொன்று
ஆசிரியரின் வகுப்பறை.....
தாயின் கருவறையில் ஒருவன்
உயிரைப் பெறுகிறான்
ஆசிரியரின் வகுப்பறையில்
அறிவைப் பெறுகிறான்

**M. ஜாஸ்மின் அபி**
M.Com I

## *POEM*

"In atoms, small ideas grow,
In reactions, future glows.
Green chemistry leads the way,
Protecting earth every day.
No toxic path, no wasted art,
Science with a caring heart.
For every student, this is true:
Chemistry builds a world a new."

## *RIDDLE*

*(Chemistry / Green Chemistry)*

I change matter without harm,
I protect the earth from danger and alarm.
No waste, no poison, clean and wise
Who am I in science eyes?
Answer : Green chemistry

## *PROVERB / QUOTE*

"The best chemistry is the one that protects life"

"Green chemistry today, sustainable world tomorrow"

**Dr. N. Radha**
Associate Professor
Dept. of Chemistry,
AGAC, KKD -3

**ஷோபனா தேவி. பி.** (பி.ஏ. தமிழ்) மற்றும் **வாசுகி. எம்** (பி.பி.ஏ.) ஆகியோர் 03.05.2025 முதல் 11.05.2025 வரை நீலகிரியில் நடைபெற்ற ALL India NCC Girls Trekking Expedition - இல் கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர்.

**சக்திவேல். எஸ்.** (பி.பி.ஏ.) அவர்கள் 05.07.2025 முதல் 14.07.2025 வரை திருச்சி சமயபுரத்தில் நடைபெற்ற Pre IGC II TSC குழு முகாமில் கலந்து கொண்டுள்ளார்.

**சிவகுமார். கே., விக்னேஷ். எஸ்., கேசவன். எம்., ரவி வர்மா. என்., சிவபாண்டி. எம்.** ஆகியோர் 11.07.2025 முதல் 20.07.2025 வரை செக்குந்தராபாத் நகரில் நடைபெற்ற Army Attachment Camp இல் கலந்து கொண்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

**நாகலட்சுமி. பி., ஹரிஹரசுதன். எம்., பாண்டி. ஆர்.**, ஆகியோர் 02.08.2025 முதல் 13.08.2025 வரை தாம்பரம் விமானப்படை நிலையத்தில் நடைபெற்ற EK Bharat Shrestha Bharat Camp இல் கலந்து கொண்டு பெருமை சேர்த்தனர்.

**சேதுபதி. சி** (பி.எஸ்.சி. பிஸிக்ஸ்) அவர்கள் 01.09.2025 முதல் 12.09.2025 வரை டெல்லியில் நடைபெற்ற ALL India Thai Sainik Camp – இல் கலந்து கொண்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

**கவுசிகா. ஆர்.** (பி.எஸ்.சி. ஆங்கிலம்) அவர்கள் 11.10.2025 முதல் 19.10.2025 வரை மதுரை இடையப்பட்டியில் நடைபெற்ற IGC RDC Camp இல் கலந்து கொண்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

**கலைவாணி. கே.** (பி.காம்) அவர்கள் 27.10.2025 முதல் 07.11.2025 வரை குவாலியரில் நடைபெற்ற All India Rock Climbing Training Camp இல் கலந்து கொண்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

**வசந்தபாரதி. டி.** (பி.ஏ. வரலாறு) அவர்கள் 28.12.2025 முதல் 05.02.2026 வரை டெல்லியில் நடைபெற்ற Republic Day Camp இல் கலந்து கொண்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.




கல்வி என்னும் வித்து
அழிக்க முடியாத சொத்து
அள்ள முடியாத முத்து
அள்ள அள்ளக் குறையாதது.
என்றென்றும் திகட்டாதது
நம்பிக்கை கை
விட்டாலும்
நீ கற்ற கல்வி என்றும்
உன்னைக் கை விடாது !

பழகிய மனங்களின் பசுமை நினைவுகள்
பசு மரத்து ஆணியாய் நினைவில் நினைக்க
நீண்ட வாழ்வின் நினைவின் ஒரு புள்ளியாய்
நற்காலமும் இங்கு பொற்காலமாய் மாறியதே
காலாவதியான கல்லூரி வாழ்க்கை

**M. ராஜலெட்சுமி**
M.Com I


துன்பம் நேர்கையில் தோள் கொடுப்பது நட்பு
உடன் பிறப்பாய் எண்ணி அன்பு காட்டுவது
நட்பு.
மனஸ்தாபம் ஏற்பட்டாலும் மனம் விட்டுப்
பேசுவது நட்பு...

அறிவை வளர்ப்பது கல்வி !
அறியாமையை அகற்றுவது கல்வி !
அள்ள அள்ளக் குறையாதது கல்வி !
அறிஞர்களை உருவாக்குவது கல்வி !
வார்த்தைகளைப் புரிய வைப்பது கல்வி !

உலகில் சிறந்தது கல்வி.
நம் வாழ்வின் செதுக்கிடும் கல்வி.
அறிவுக் கண்ணைத் திறந்திடும் கல்வி.
அறியாமை இருளை அகற்றிடும் கல்வி !

**K. சந்தியா**
M.Com I

**கிராமியச் சூழல்**





**T. Santhiya**
B.Com I Year

21.6.2025 அன்று உலக யோகா தினம் நடைபெற்றது. உமையாள் கலையரங்கில் திரு. **சுப்பு** பேராசிரியர் அவர்களின் செய்முறை விளக்கத்துடன் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நமது கல்லூரியில் 2025 - 26 ஆண்டில் 05.08.2025 அன்று உமையாள் கலையரங்கில் இரத்ததான முகாம் நடைபெற்றது. 06.09.2025 அன்று பள்ளி மாணவர்களுக்கு உயர்வுக்கு வழி என்ற நிகழ்ச்சி அரசு வழிகாட்டலின் படி சிறப்பாக நடைபெற்றது.

குன்னூரில் நடைபெற்ற 13.09.2025 முதல் 18.09.2025 வரை நடைபெற்ற சாகச சிறப்பு முகாமில் நமது கல்லூரியின் சார்பாக மூன்று மாணவர்கள் கலந்து கொண்டனர். 14.10.2025 அன்று சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி, நமது கல்லூரியில் இருந்து புதிய பேருந்து நிலையம் வரை சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

16.10.2025 அன்று உமையாள் கலையரங்கில் தற்கொலை எண்ணம் தவிர்த்தலைப் பற்றிக் காவல்துறை ஆய்வாளர் செல்வி தலைமையில் மாணவர் மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சிறப்பு முகாம் வேலங்குடி கிராமத்தில் 30.01.2026 முதல் 05.02.2026 வரை நடைபெற்றது. முதல்வர் அவர்களின் வழிகாட்டலின் படி இதில் மாணவ மாணவிகள் ஒரு வார காலம் தங்கிக் கிராம மக்களுக்குச் சேவை செய்தனர்.

# மரணம் பேசுகிறேன்

என்னைக் கண்டு பயப்படாதீர்கள் !
நான் தான் உங்களை வாழ வைத்து
கொண்டிருக்கிறேன்...

விதி முடிந்தால் நான் வருவது
உண்மைதான் ஆனால் உங்கள் மதி
தான் அதற்குள்ளேயே ! உங்கள்
வீட்டுக்கு என்னை அழைத்து
விடுகிறது...

நான் வந்ததற்காக ஒன்று கூடி
ஒப்பாரி வைக்கின்றீர்கள் நானாக
வருவதில்லை நீங்கள் தான்
அழைக்கின்றீர்கள்...

தன்னம்பிக்கை இல்லாதவர்கள்
என்னை விருந்து வைத்து அழைப்பது
போல் மருந்து வைத்து
அழைக்கின்றனர்...

கையிருந்தும் கஷ்டங்களோடு
போராடாதவர்கள் தற்கொலை என்ற
பெயரில் கயிறு போட்டு என்னை இழுக்கின்றனர்...

வாழ்க்கையில் விவேகத்தைக் காட்டாமல்
வண்டியில் வேகத்தைக் காட்டி
விபத்துக்குள்ளாகி 108-ல் வந்து என்னை
அழைத்துச் செல்லுமாறு அழைப்பு
விடுக்கின்றனர்...

வாழ்வதற்காகச் சாப்பிடாமல்
சுவைக்காகவே சாப்பிட்டு சவம்
ஆனவர்கள் சுடுகாட்டிற்கு தூக்கிச்
செல்ல பாடையோடு வரச்
சொல்கின்றனர் நான் என்ன
செய்வது...?

என்னால் இறந்தவர் மட்டுமல்ல
வாழ்ந்தவர்களும் இருக்கிறார்கள்...

இந்த உலகம் உங்களுக்கு நிரந்தரம்
இல்லை என்று நான் கத்தி கத்தி
சொல்லியும் காதில் வாங்காமல்
பணத்திற்காக கொலை செய்வதும்
கொள்ளையடிப்பதும் ஊழல் செய்வதும்
ஏமாற்றுவதும் திருடுவதும் பாவங்கள்
செய்வதும் அதிகரித்துக் கொண்டே போகிறது...

நான் இல்லை என்றால் என்னாகும்
சற்று யோசித்துப் பாருங்கள் ?

நான் இல்லாமல் போயிருந்தால்
முதுமையை எப்படி கடந்திருப்பாய் ?
முக்தியை எப்படி பெற்றிருப்பாய் ?

சிலர் செய்த தவறுக்கு நான்
தண்டனையாக மட்டுமல்ல
திருந்துவதற்கு வாய்ப்பாகவும்
இருந்திருக்கிறேன்...

பிறப்பு இருக்கும் வரை நான் இருப்பேன்
ஒருவேளை நான் இல்லாமல் போனால்
பிறப்பும் இல்லாமல் போகலாம்.....

என்னை கண்டு பயப்படாதே நான் தான்
உன்னை வாழ வைக்கிறேன்..



**M. Yazhini**
B.Com II B

அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் மாணவர்களின் நுண்கலைத் திறன்களை வளர்த்தெடுக்கும் வகையில் நுண்கலை மன்றம் செயல்பட்டு வருகின்றது.

நமது கல்லூரியின் நுண்கலை மன்ற மாணவர்கள் 2025 - 2026 ஆம் கல்வியாண்டில் தமிழக அளவில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் பரிசுகளை வென்று நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

சிவகங்கை மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துறை 11.07.2025 அன்று கலைஞர் கருணாநிதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நடத்திய பேச்சுப் போட்டியில் புவியமைப்பியல் மூன்றாமாண்டு மாணவி **V. அபிநயா** மூன்றாம் இடத்தைப் பெற்று ரூ.5000 பணப்பரிசையும் பெற்றார்.

31.08.2025 அன்று நடைபெற்ற வீறுகவியரசர் முடியரசன் அவைக்களப் பேச்சுப் போட்டியில் விலங்கியல் துறை இரண்டாம் ஆண்டு மாணவி **A. காளிமுத்து** இரண்டாம் இடத்தையும், கணினிப் பயன்பாட்டியல் துறை மூன்றாம் ஆண்டு மாணவி **R. காவ்யா** மூன்றாம் இடத்தையும் பெற்றனர். கட்டுரைப் போட்டியில் ஆங்கிலத் துறை முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவி **K. ஹேமலதா** மூன்றாம் பரிசைப் பெற்றார். வெற்றி பெற்ற மாணவிகளுக்கு உயர்கல்வித் துறை அமைச்சர் **கோவி. செழியன்** மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் **KR. பெரியகருப்பன்** ஆகியோர் பரிசுகள் வழங்கினர்.

21.08.2025அன்று பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப் போட்டியில் இளங்கலைத் தமிழ் மூன்றாம் ஆண்டு மாணவி **A. மாதரசி** மூன்றாம் பரிசு மற்றும் ரூ.5000 பெற்றார். 22.08.2025 அன்று தந்தை பெரியார் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற போட்டியில் வணிகவியல் துறை மூன்றாம் ஆண்டு மாணவி A. சார்மதி முதலிடம் பெற்று **ரூ.10,000/-** பணப்பரிசை வென்றார்.

25.09.2025 அன்று திருப்பத்தூர் ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரியில் நடைபெற்ற Glow Fest நிகழ்ச்சியில் குழு நடனப் போட்டியில் **சங்கீதா, M. மதிப்பிரியா, G. கீர்த்திகா, R. நந்தினி, A. சவுந்தர்யா** ஆகியோர் முதலிடம் பெற்றனர். மௌன நாடகப் போட்டியில் **S. நர்கீஸ் பானு, S. சுருதி ஸ்ரீ, A. திவ்யா, G. அகல்யா, S. கமலம், S. கன்னிகா** ஆகியோர் முதலிடம் பெற்றனர். பாடல் போட்டியில் **S. அன்னபூரணி** முதலிடம் பெற்றார். மணப்பெண் அலங்காரப் போட்டியில் **இன்பேன்சியா** மற்றும் **K. தீபஜோதி** இரண்டாம் பரிசு பெற்றனர். நாகரிக நடைப் போட்டியில் **A. சார்மதி** மூன்றாம் பரிசு பெற்றார். புகைப்படப் போட்டியில் **R. புவனேஸ்வரி** மூன்றாம் இடம் பெற்றார். மேலும் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் கல்லூரி வென்றது.

15.10.2025 அன்று நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் S. அன்னபூரணி முதலிடம் பெற்று ரூ.10,000/- பெற்றார். பேச்சுப் போட்டியில் A. மாதரசி மூன்றாம் இடம் பெற்று ரூ.5000/- பெற்றார்.

16.12.2025 அன்று சென்னை நகரில் நடைபெற்ற மாநில அளவிலான சமூக நீதி நாள் பேச்சுப் போட்டியில் **A. சார்மதி** முதலிடம் பெற்று ரூ.1,00,000/- பெற்றார். **A. மாதரசி** மூன்றாம் இடம் பெற்று ரூ.25,000/- பெற்றார்.

26.12.2025 அன்று தேவகோட்டை ஸ்ரீ சேவகன் அண்ணாமலை கல்லூரியில் நடைபெற்ற போட்டிகளில் **A. மாதரசி** பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்று ரூ.3000/- பெற்றார். **V. அபிநயா** கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்றார். **M. பைரவ ரூபினி** இரண்டாம் இடம் பெற்றார். **S. அன்னபூரணி** சிறுகதைப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்றார். மேலும் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் கல்லூரி பெற்றது.

14.02.2026 அன்று சென்னை S.R.M. தமிழ்ப் பேராயம் நடத்திய மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் **A. மாதரசி** முதல் இரண்டு சுற்றுகளில் வெற்றி பெற்று ரூ.10,000/- பெற்றார்.

மாணவர்களின் தனித்திறன்களை வளர்க்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட நுண்கலை மன்றம் தனது பணியைச் சிறப்பாக செய்து வருகிறது.





**Harini Doss**
I B.Com





**பி. திவ்ய தர்ஷினி**
**I B.com - A**

## இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் 2025 - 2026

30.01.2026 அன்று அழகப்பா அரசு கலைக்கல்லூரி தமிழ் உயராய்வு மையக் கருத்தரங்க அறையில் காலை 11 மணியளவில் கல்லூரி முதல்வர் முனைவர் ப. வசந்தி அவர்களின் வழிகாட்டுதலில் இளஞ்செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர்அ. பாரதிராணி (உதவிப் பேராசிரியர் தமிழ் உயராய்வு மையம்) அவர்கள் வரவேற்புரை வழங்க, திரு . A.D. விக்டர் அவர்கள் தலைமைத்துவப் பண்புகள் என்னும் பொருண்மையில் சிறப்புரையாற்றினார். அழகப்பா சையின்ஷ்சிட்டி அமைப்பாளர் திரு. எஸ். கோபாலாகிருஷ்ணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இளங்கலை மூன்றாமாண்டு மாணவி சோ.இலக்கியராணி அவர்கள் நன்றியுரை நல்கினார்.

27.02.2026 அன்று இளஞ்செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமையில், போதை ஒழிப்பு, நேசனல் டாஸ்க் போர்ஷ் மற்றும் மனநல விழிப்புணர்வு ஆகிய அமைப்புகள் இணைந்து ஒருநாள் புத்தாக்கப் பயிற்சி மற்றும் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. தாவரவியல்துறை உதவிப்பேராசிரியர் திரு. AL. பழனிச்சாமி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். தலைமை உரையினை கல்லூரி முதல்வர் முனைவர் ப. வசந்தி அவர்கள் நல்கினார். சிறப்பு விருந்தினர் அறிமுகத்தை வரலாற்றுத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் S.சரவணன் அவர்களும், நன்றியுரையினை தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் அ. பாரதிராணி அவர்களும் வழங்கினார்கள். நிகழ்வில் குளோபல் மிஷன் மருத்துவமனை சேர்மன் மருத்துவர் வி. குமரேசன் அவர்கள் சிறப்புரை நல்கினார். குளோபல் மருத்துவமனை மருத்துவர்கள் மருத்துவர் எஸ். பூங்குன்றன், மருத்துவர் எம். சூர்யா, மருத்துவர் எம். பானுப்பிரியா IRCS ஆகியோர் பொதுமருத்துவத்தின் சார்பாகவும், மருத்துவர் வி. கலைவாணி (பிரபு பல் மருத்துவமனை), பல்மருத்துவம் சார்பாகவும், கானல் கண்மருத்துவம் சார்பாகக் கண் தொடர்பான மருத்துவப் பரிசோதனைகளும் நடத்தப்பட்டன.

12.03.2026 அன்று அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் Stray Dogs Control and Management மற்றும் இளஞ்செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து விழிப்புணர்வு நிகழ்வினைத் தாவரவியல் ஆய்வகத்தில் நடத்தியது. கல்லூரி முதல்வர் முனைவர் ப. வசந்தி அவர்களின் தலைமையில் முனைவர் எஸ். அன்பழகன் தாவரவியல்துறை இணைப்பேராசிரியர் வரவேற்புரை வழங்கினார். புதுக்கோட்டை கால்நடை மருத்துவமனையைச் சார்ந்த மருத்துவர் முனைவர் எம். ஈஸ்வரி அவர்கள் நாய்கள் குறித்த விழிப்புணர்வைச் சிறப்புரையாக வழங்கினார். இளஞ்செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ. பாரதிராணி (உதவிப்பேராசிரியர் தமிழ் உயராய்வு மையம்) அவர்கள் நன்றியுரை நல்கினார்.

### கல்லூரி கவிதை

கல்லூரி என்பது
கல்வியின் கோயில்,
அறிவை விதைத்து
வாழ்க்கையை வளர்க்கும் தாயகம்

நண்பர்கள் சேரும்
நினைவுகளின் தோட்டம்
நாளைய கனவுகள்
நனவாகும் இடம்.

ஆசிரியர் சொல்வது
வாழ்க்கைப் பாடம்,
அதைகற்றுக்கொள்வோம்
நாளைய சாதனைக்காக,

கல்லூரி நாட்கள்
மறக்க முடியாதவை
வாழ்க்கை முழுவதும்
நினைவாக நிற்கும் இனியவை.



**வா. நாகராஜ்**
வணிகவியல் துறை
முதலாம் ஆண்டு
'ஆ' பிரிவு





**R. Revathi**
B.Com I-B

கல்லூரியில் மகளிர் மன்றமும் IQAC - யும் இணைந்து ஆசிரியர்கள் மற்றும் மாணவிகளுக்கு Add-on-course ஆக Beautician, Aari Work, Spoken English & Personality Development ஆகிய Certificate Course - கள் நடத்தப்படுகிறது. 03.03.2024 அன்று நடைபெற்ற மன்றத்தின் தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு Dr. Sri Harini அவர்கள் Hygiene & Health Issues தொடர்பாக கருத்துகளை எடுத்துரைத்தார். மகளிர் மன்றம் சார்பாக மாணவிகளுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.




**எப்படி வாழ்வான் பார்க்கலாம்**
**என்பவர்களுக்கு மத்தியில்**
**இப்படித்தான் வளர்ந்தேன்**
**என்று**
**வாழ்ந்து காட்டுங்கள்...!**
**மோது...! போராடு...!**
**விழு...! அழு! நில் ...!**
**தோல்விகள் வரும்...**
**வஞ்சனைகள் வரும்...**
**சூழ்ச்சிகள் வரும்...**
**துரோகிகளும் வருவார்**
**இவைதான் உன்**
**வெற்றிக்கான சவால்கள்...!**



**ஜோ. ஜெல்ஸியா**
**II B.com - A**

## சமூக முன்னேற்றத்தில் மாணவர்களின் பங்கு

### முன்னுரை

மாணவர்கள் ஒரு நாட்டின் எதிர்காலம் என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். ஒரு சமூகத்தின் வளர்ச்சி அதன் மாணவர்களின் சிந்தனை, செயல்கள் மற்றும் பொறுப்புணர்வைப் பொறுத்தது. கல்வி கற்ற மாணவர்கள் நல்ல ஒழுக்கம், ஒற்றுமை மற்றும் மனிதநேயம் போன்ற நல்ல பண்புகளை வளர்த்துக் கொண்டால் சமூகத்தில் நல்ல மாற்றங்களை உருவாக்க முடியும். எனவே சமூக முன்னேற்றத்தில் மாணவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

### அப்துல் கலாம் கூறியது

கனவு காணுங்கள், அந்த கனவுகளை சிந்தனையாக மாற்றுங்கள்; சிந்தனைகளைச் செயலாக மாற்றுங்கள் என்று டாக்டர் அப்துல் கலாம் கூறியுள்ளார். மாணவர்கள் உயர்ந்த கனவுகளைக் கொண்டு அதனை செயல்படுத்த முயற்சி செய்தால் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும். அவரது வார்த்தைகள் மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் ஒரு பெரிய வழிகாட்டுதலாக இருக்கின்றன.

### சுவாமி விவேகானந்தர் கூறியது

சுவாமி விவேகானந்தர் அவர்கள் இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிய ஊக்கமாக இருந்தவர். இளைஞர்களின் சக்தியே ஒரு நாட்டின் உண்மையான வலிமை என்று நம்பினார். மாணவர்கள் தன்னம்பிக்கை, துணிவு மற்றும் கடின உழைப்புடன் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று அவர் கூறினார். எழுந்திருங்கள், விழித்திருங்கள் இலக்கை அடையும் வரை நிற்காதீர்கள் என்ற அவரது வார்த்தைகள் மாணவர்களுக்கு ஒரு பெரிய ஊக்கமாக உள்ளது. மாணவர்கள் உயர்ந்த இலக்குகளை வைத்து அதனை அடைய தொடர்ந்து முயற்சி செய்தால் சமுதாயத்திலும் நாட்டிலும் நல்ல மாற்றங்களை உருவாக்க முடியும் என்று அவர் வலியுறுத்தினார்.

### முடிவுரை

மாணவர்கள் தங்களுடைய அறிவையும் திறமையையும் சமூக நலனுக்காகப் பயன்படுத்தினால் நாடு விரைவாக முன்னேறும், ஆனால் இன்றைய இளைஞர்கள் சமூக ஊடகங்கள் நலனுக்காக பாடுபடுகின்றனர். ஒவ்வொரு மாணவரும் பொறுப்புடன் செயல்பட்டால் நல்ல முன்னேற்றமான சமுதாயத்தை உருவாக்க முடியும்.

இன்றைய மாணவர்கள் தான்
நாளைய சமூக மாற்றத்தின்
வலிமையான சக்தி



**S. Muthu Priya**
B.Com II
I Shift

**அழகப்பா அரசு கலைக்கல்லூரி,** காரைக்குடி - 3.

| | | |
|---|---|---|
| மலர்க்குழு ஆசிரியர் | : | முனைவர் **ப. வசந்தி**<br>முதல்வர் |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் **க. அமுதா**<br>இணைப்பேராசிரியர் - தமிழ்த்துறை |
| உறுப்பினர்கள் | : | திருமதி **க. கவிதா**<br>உதவிப்பேராசிரியர் - இயற்பியல் துறை |
| | | முனைவர் **அ. பாலசுப்பிரமணியன்**<br>இணைப்பேராசிரியர் - கணிதத்துறை |
| | | முனைவர் **எம். கருணாகரன்**<br>இணைப்பேராசிரியர் - இயற்பியல் துறை |
| | | முனைவர் **மு. மரகதவல்லி**<br>இணைப்பேராசிரியர் - தமிழ்த்துறை |
| | | முனைவர் **கா. அர்ச்சுணன்**<br>இணைப்பேராசிரியர் - கணிதத்துறை |


| | | |
|---|---|---|
| 1.Place of Publication | : | **Alagappa Govt. Arts College, Karaikudi - 630 003.** |
| 2.Periodicity of its Publication | : | **Annual** |
| 3.Language | : | **Tamil and English** |
| 4.For whom it is circulated | : | **Among the members of the staff and students of this college.** |
| 5.Printer's Name | : | **SLP Sri Lakshmi Printers** |
| Nationality | : | **Indian** |
| Address | | **# 2A, Subramaniyapuram, 1st Street, Karaikudi - 2.** |
| 6.Editor's Name | : | **Dr. K. Amudha** |
| Nationality | : | **Indian** |
| Address | : | **Associate Professor<br>Tamil Research Centre<br>Alagappa Govt Arts College.<br>Karaikudi - 3** |
| 7.Publisher's Name | : | **Dr. P. Vasanthi** |
| Nationality | : | **Indian** |
| Address | : | **Principal,<br>Alagappa Govt Arts College,<br>Karaikudi - 3** |

Certified that the above particulars are true to the best of my knowledge.- Editor

# 2025 - 2026 ஆம் கல்வியாண்டில் ஓய்வு பெறுபவர்கள்



முனைவர் V. குணசேகரன்
இணைப்பேராசிரியர்
வரலாற்றுத் துறை
அழகப்பா அரசு கலைக் கல்லூரி
காரைக்குடி – 630 003



முனைவர் க. மோகன்
MA., M.Phil., Ph.D., PGDCA
ஆய்வக உதவியாளர்
இயற்பியல் துறை
அழகப்பா அரசு கலைக் கல்லூரி
காரைக்குடி – 630 003



திரு. பெ. நாச்சியப்பன் BA.,
தே. நிலை ஆய்வக உதவியாளர்
அழகப்பா அரசு கலைக் கல்லூரி
காரைக்குடி – 630 003




அழகப்பா அரசு கலைக் கல்லூரி இயற்பியல் துறையால் நடத்தப்பட்ட ஒருநாள் தேசிய கருத்தரங்க நிகழ்வு









குமரி திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா ஆண்டினை முன்னிட்டுத் தமிழக அரசின் நிதி நல்கையுடன் நடத்தப்பட்ட வான்புகழ் வள்ளுவம் பன்னாட்டுக் கருத்தரங்கம்








டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் கலந்து கொண்ட தேசிய மாணவர் படை மாணவர் வசந்த பாரதியை கௌரவித்த போது



2025 சுதந்திர தின கொண்டாட்டத்தின்போது



SLP™ www.slpcolorprints.com
Mob : +91 9486 22 7777